# மகிழ்ச்சி

குழந்தைகளின் குதூகலம்

7



Maria

விடை தொகுப்பு

Maria

## மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.

முதல் பதிப்பு **2020**

பதிவு அலுவலகம்
**138**, ஹைவேய்ஸ் காலனி, சுப்ரமணியபுரம், திருச்சிராப்பள்ளி **– 620 020.**

தலைமை அலுவலகம்
**30 & 31**, நட்சத்திரா, ஐ.ஏ.எஃப். சாலை, கிழக்கு தாம்பரம், சென்னை **– 600 059.**
தொலைபேசி **: 044 – 22392332**

மின்னஞ்சல்
info@mariapublishers.com

இணையதளம்
www.mariapublishers.com

வெளியிட்டோர்
மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.,
**13**, சுந்தர்ராஜ் நகர், சுப்ரமணியபுரம்,
திருச்சிராப்பள்ளி **– 620 020.**
தொலைபேசி **: 0431 – 2331245**

அட்டை வடிவமைப்பு
முத்துக்குமார்

புத்தக வடிவமைப்பு
ஜென்சி

அச்சிட்டோர்
தி சபையர் ஆஃப்செட் பிரிண்டர்ஸ்

## 1. எங்கள் தமிழ்

**பக்கங்கள் 10-11**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அமுதம்  2. இனிமையான  3. தொண்டுகள்
4. மிகுதி  5. கனகசுப்புரத்தினம்

**ஆ) பிரித்து எழுதுக.**

1. பிழிந்து + இட்ட  2. சுவை + உள்ள  3. கண்டது + இல்லை
4. நனி + உண்டு  5. தரம் + உண்டு

**இ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. உமது  2. துன்பம்  3. தோற்கும்  4. பகல்  5. கெட்ட

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. தமிழ்மொழி எத்தகையது?

தமிழ்மொழி இனிமையானது. அமுதம் போன்று இன்பத்தை அளிக்க கூடியது. நன்கு கனிந்த பழத்தின் சாறு போல இனிப்பது தமிழ்மொழி.

2. தமிழ் சொற்களின் சிறப்பு யாது?

தமிழ்மொழியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் ஓர் இனிமையான சுவையை உடையது. இத்தகையச் சிறப்பு உலகிலுள்ள வேறெந்த மொழிக்கும் இல்லை.

3. தமிழ்மொழிக்கு மக்கள் என்ன செய்ய வேண்டுமென பாரதிதாசன் கூறுகிறார்?

தமிழ்மொழிக்கு மக்கள் நாள்தோறும் நல்ல தொண்டுகள் செய்யவேண்டும்; தமிழன் என தோள்தட்டிப் பெருமையுடன் கூறவேண்டும்; தமிழ் வெல்க என்றே தினமும் பாட வேண்டும் என பாரதிதாசன் கூறுகிறார்.

4. பாரதிதாசன் எங்கு, எப்போது பிறந்தார்?

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் புதுச்சேரியில் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் நாள் பிறந்தார்.

5. பாரதிதாசன் இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.

பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, தமிழ் இயக்கம், இசையமுது, குயில் பாட்டு, தமிழச்சியின் கத்தி, பாரதிதாசன் ஆத்திசூடி, பிசிராந்தையார் என்பன பாரதிதாசன் இயற்றிய நூல்கள் ஆகும்.

## 2. தாய்மொழி

**பக்கம் 13**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. சூரியன் 2. பிரிந்து 3. மூடி
4. உதவாது 5. இது

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. அழ. வள்ளியப்பா எங்கு, எப்போது பிறந்தார்?

   அழ. வள்ளியப்பா அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ராயவரம் என்ற சிறு கிராமத்தில் 1922 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் நாள் பிறந்தார்.

2. வள்ளியப்பாவின் பெற்றோர்கள் யார்?

   வள்ளியப்பாவின் பெற்றோர்கள் அழகப்ப செட்டியார் மற்றும் உமையாள் ஆச்சி ஆவர்.

3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வள்ளியப்பாவிற்கு வழங்கிய விருது என்ன?

   மதுரை காமராசர் பல்கலைக்கழகம் "தமிழ் பேரவைச் செம்மல்" என்ற விருதை வள்ளியப்பாவிற்கு வழங்கி பாராட்டியது.

4. வள்ளியப்பா இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.

   இனிக்கும் பாடல்கள், ஈசாப் கதைப் பாடல்கள், குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள் (தொகுதி 1, 2), குழந்தைக் கவிஞரின் வேடிக்கைப் பாடல்கள், சிட்டுக் குருவி, சிரிக்கும் பூக்கள், சின்னஞ்சிறு பாடல்கள், பாப்பாவுக்குப் பாட்டு, பாலர் பாடல், பாடிப் பணிவோம், பாட்டுப் பாடுவோம், மலரும் உள்ளம் (தொகுதி 1, 2) முதலியன வள்ளியப்பா இயற்றிய நூல்கள் ஆகும்.

5. "தாய்மொழி" பாடலின் பொருளை சுருக்கமாக எழுதுக.

   குழந்தைகளின் அழுகையை நிறுத்த தாய் தாலாட்டுப் பாடி சொல்லித் தந்த மொழி தமிழ்மொழி ஆகும். சந்திரனை அழைத்து சாய்ந்தாடிக் கற்ற மொழி தமிழ் மொழி ஆகும். பாட்டி பல கதைகளை கூறி மொழி, பல பாடல்களைப் பாடி இன்பம் பெற்ற மொழியே தமிழ்மொழியாகும். கூடி விளையாடவும், கூட்டுறவை வளர்க்கவும் உதவும் மொழி தமிழ் மொழியாகும். மனந்திறந்து பேசவும், வாழ்வில் சிறந்து விளங்கிடவும் உதவும் மொழி தமிழ்மொழியாகும். அத்தகைய இனிமையான மொழியே எங்களின் தாய்மொழியாகும்.

## 3. எட்டுத் தொகை நூல்கள்

**பக்கங்கள் 19-20**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) நற்றிணை 2. ஈ) 400 3. ஆ) ஓரம்போகியார்
4. இ) பரணர் 5. ஈ) அகநானூறு

**ஆ) பொருத்துக.**

1. கபிலர் 2. சோழன் நல்லுருத்திரன்
3. மருதன் இளநாகனார் 4. நல்லந்துவனார் 5. பெருங்கடுங்கோ

**இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி
2. பாரதம் பாடிய பெருந்தேவனார் 3. பரிமேலழகர்
4. கலித்தொகை 5. ஜி.யூ. போப்

**ஈ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள நூல்களின் பெயர்களை எழுதுக.

   நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியன எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள நூல்கள் ஆகும்.

2. திணை அடிப்படையில் நற்றிணையிலுள்ள பாடல்களின் எண்ணிக்கையை பட்டியலிடுக.

   குறிஞ்சித் திணையில் 130 பாடல்களும், பாலைத் திணையில் 107 பாடல்களும், நெய்தல் திணையில் 101 பாடல்களும், மருதத் திணையில் 33 பாடல்களும், முல்லைத் திணையில் 28 பாடல்களும் அமைந்துள்ளன.

3. குறுந்தொகை – பெயர்க்காரணம் எழுதுக.

   குறுந்தொகை என்பது குறுகிய அடிகளால் ஆன பாடல்களின் தொகுப்பாகும். கடவுள் வாழ்த்துப் பாடல் நீங்கலாக 400 பாடல்கள் உள்ளன. இந்நூலிலுள்ள பாடல்கள் 4 அடி முதல் 8 அடி வரை அமைந்துள்ளன. இப்பாடல்கள் 205 புலவர்களால் பாடப்பட்டதாகும். கடவுள் வாழ்த்துப் பாடலை பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். தொகுப்பித்தவரின் பெயர் தெரியவில்லை. இந்நூலிற்கு “நல்ல குறுந்தொகை” என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

4. கலித்தொகையில் எவற்றைப் பற்றி புகழ்ந்துப் பாடப்பட்டுள்ளது?
பாண்டிய நாடு, பாண்டிய மன்னன், மதுரை மாநகர், வைகை ஆறு போன்றவற்றைப் பற்றி கலித்தொகையில் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது.

5. அகநானூறு நூலின் மூன்று பகுதிகளை எழுதுக.
களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை ஆகியன அகநானூறு நூலிலுள்ள மூன்று பகுதிகள் ஆகும்.

**உ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. ஐங்குறுநூறு – நூல் குறிப்பு எழுதுக.
சங்க காலத்தைச் சேர்ந்த எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ஐங்குறுநூறு ஆகும். இந்நூலில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து திணைகளைப் பற்றி பாடப்பட்டுள்ளது. திணை ஒவ்வொன்றிற்கும் நூறு பாடல்கள் வீதம் மொத்தம் ஐந்நூறு அகத்திணைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலிலுள்ள பாடல்கள் **3** அடி முதல் **5** அடி வரை அமைந்துள்ளன. இந்நூலை தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஆவார். இந்நூலிலுள்ள ஒவ்வொரு திணையைச் சார்ந்த பாடல்களும் ஐந்து வெவ்வேறு புலவர்களால் இயற்றப்பட்டதாகும். மருதத் திணைப் பாடல்களை இயற்றியவர் ஓரம்போகியார். நெய்தல் திணைப் பாடல்களை இயற்றியவர் அம்மூவனார். குறிஞ்சித் திணைப் பாடல்களை இயற்றியவர் கபிலர். பாலைத் திணைப் பாடல்களை இயற்றியவர் ஓதலாந்தையார். முல்லைத் திணைப் பாடல்களை இயற்றியவர் பேயனார்.

2. பதிற்றுப்பத்திலுள்ள பகுதி, பாடிய புலவர், பாட்டுடைத் தலைவன் ஆகியோரை பட்டியலிடுக.

| பகுதி | பாடிய புலவர் | பாட்டுடைத் தலைவன் |
|---|---|---|
| முதற் பத்து | - | - |
| இரண்டாம் பத்து | குமட்டூர்க் கண்ணனார் | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் |
| மூன்றாம் பத்து | பாலைக் கௌதமனார் | பல்யானைச் செல்கெழு குட்டுவன் |
| நான்காம் பத்து | காப்பியாற்றுக் காப்பியனார் | களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் |
| ஐந்தாம் பத்து | பரணர் | கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் |

| | | |
|---|---|---|
| ஆறாம் பத்து | காக்கைபாடினியார் | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் |
| ஏழாம் பத்து | கபிலர் | செல்வக் கடுங்கோ வாழியாதன் |
| எட்டாம் பத்து | அரிசில்கிழார் | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை |
| ஒன்பதாம் பத்து | பெருங்குன்றூர் கிழார் | இளஞ்சேரல் இரும்பொறை |
| பத்தாம் பத்து | - | - |

3. கலித்தொகை பாடல்கள் மற்றும் திணை அமைப்பு முறையினைப் பற்றி எழுதுக.

   சங்க காலத்தைச் சேர்ந்த தமிழ் இலக்கியத் தொகுதியான எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவது நூலாக விளங்குவது கலித்தொகை. இந்நூல் கலிப்பா என்னும் பாவகையால் இயற்றப்பட்ட 150 பாடல்களைக் கொண்டது. கலித்தொகையிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடலை இயற்றியவர் நல்லந்துவனார். கடவுள் வாழ்த்துப் பாடல் நீங்கலாக, பாலைத் திணைப் பற்றிய 35 பாடல்களை இயற்றியவர் பெருங்கடுங்கோ. குறிஞ்சித் திணைப் பற்றிய 29 பாடல்களை இயற்றியவர் கபிலர். மருதத் திணைப் பற்றிய 35 பாடல்களை இயற்றியவர் மருதன் இளநாகனார். முல்லைத் திணைப் பற்றிய 17 பாடல்களை இயற்றியவர் சோழன் நல்லுருத்திரன். நெய்தல் திணைப் பற்றிய 33 பாடல்களை இயற்றியவர் நல்லந்துவனார். இந்நூலைத் தொகுத்தவர் நல்லந்துவனார் மற்றும் உரை எழுதியவர் நச்சினார்க்கினியர்.

4. அகநானூறு உணர்த்தும் செய்திகள் என்ன?

   அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூலே அகநானூறு ஆகும். இந்நூலிற்கு நெடுந்தொகை என்ற சிறப்புப் பெயரும் உள்ளது. பண்டையக் காலத் தமிழர்களின் அரசியல் வரலாறு, சமூக வரலாறு போன்றவற்றைப் பற்றி அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவுகிறது. மேலும் பல்வேறு சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றியும், குறுநில மன்னர்களைப் பற்றியும், இந்நூல் எடுத்துரைக்கிறது. தலைவன் மற்றும் தலைவியின் அன்பு, இல்லறம் நடத்தும் முறை, பண்டையத் தமிழர்களின் வணிகம், திருமண முறை போன்ற பல்வேறு செய்திகளையும் அறிந்து கொள்ள இந்நூல் உதவுகிறது.

5. புறநானூறு பற்றி குறிப்பு வரைக.

புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் புறநானூறு ஆகும். இந்நூலுக்கு புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு போன்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. இந்நூலை தொகுத்தவர் மற்றும் தொகுப்பித்தவர் யார் என்று தெரியவில்லை. இந்நூலிலுள்ள பாடல்கள் 4 அடி முதல் 40 அடி வரை அமைந்துள்ளன. அரசன் முதல் குடிமக்கள் வரை பல்வேறு நிலைகளிலிருந்த ஆண் மற்றும் பெண் புலவர்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாக புறநானூறு திகழ்கிறது. உலகிலுள்ள மக்களின் வாழ்விற்கு இன்றியமையாத பண்புகள் அனைத்தையும் எடுத்துரைக்கிறது. அக்கால தமிழ் மக்களின் சமூகம், பொருளாதாரம், கல்வி, நாகரிகம், கலை, வீரம், கொடை, ஆடை, அணிகலன், பழக்க வழக்கங்கள், வணிகம் போன்றவற்றைப் பற்றிய பல்வேறு செய்திகளை எடுத்துரைக்கிறது. இந்நூலை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். கபிலர், ஔவையார், பெருஞ்சித்திரனார், கணியன் பூங்குன்றனார் போன்ற பல புகழ்பெற்ற புலவர்களால் இயற்றப்பெற்ற நூலே புறநானூறு ஆகும்.

## 4. குற்றியலுகரம், குற்றியலிகரம்

**பக்கங்கள் 23-24**

**அ) பொருந்தாத சொற்களை வட்டமிடுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. பாடு | (இஃது) | காது | ஆறு |
| 2. விறகு | அரசு | அரிது | (பட்டு) |
| 3. (மூழ்கு) | பஞ்சு | நண்டு | பந்து |
| 4. செய்து | (கன்று) | மார்பு | பல்கு |
| 5. நாடியாது | கொக்கியாது | (சென்மியா) | குரங்கியாது |

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. குற்றியலுகரம் என்றால் என்ன?

குறுகிய ஓசையுடைய உகரம் குற்றியலுகரம் ஆகும். தமிழில் உகரம் ஒரு மாத்திரை அளவு உடையது. இந்த ஒரு மாத்திரை அளவுடைய உகரம் அரை மாத்திரையாக குறுகி ஒலிப்பதே குற்றியலுகரம் எனப்படும்.

2. குற்றியலுகரத்தின் வரையறைகள் யாது?

- வல்லின மெய்களோடு (கு, சு, டு, து, பு, று) சேர்ந்து வரும் உகரம் மட்டுமே குற்றியலுகரமாக வரும்.

- கு, சு, டு, து, பு, று என்ற ஆறு எழுத்துகளும் சொல்லின் கடைசி எழுத்தாக இருக்க வேண்டும்.
  எ.கா. நாக்கு, காசு, பாடு
- தனிக்குறில் எழுத்தை அடுத்து வந்தால் அது குற்றியலுகரம் அல்ல.
  எ.கா. அறு, இது, வடு, பசு

3. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை நெடில் தொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம், உயிர்த் தொடர்க் குற்றியலுகரம், வன் தொடர்க் குற்றியலுகரம், மென் தொடர்க் குற்றியலுகரம் மற்றும் இடைத் தொடர்க் குற்றியலுகரம்.

4. உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தை விளக்குக.
   உயிர் எழுத்தைத் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று எனும் எழுத்துகள் வருவது உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.
   எ.கா. அழகு
   “அழகு” என்ற சொல்லின் இறுதியில் நிற்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். இதிலுள்ள “ழ” என்னும் உயிர்மெய் எழுத்தானது ழ் + அ என்ற இரண்டு எழுத்துகளின் கூட்டாகும். “ழ” என்ற உயிர்மெய் எழுத்து வந்திருந்தாலும், “அ” என்னும் உயிர் எழுத்தே உண்மையில் முன் நிற்கிறது. இதுவே உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

5. குற்றியலிகரம் என்றால் என்ன?
   குறுகிய ஓசையுடைய இகரம் குற்றியலிகரம் எனப்படும். தமிழில் நிலைமொழியின் ஈற்றெழுத்து குற்றியலுகரமாகவும், வருமொழியின் முதல் எழுத்து யகரமாகவும் இருந்தால், அவ்விரண்டும் சேரும்போது நிலைமொழி ஈற்றிலுள்ள குற்றியலுகரம் இகரமாகத் திரியும். இவ்வாறு திரிந்த இகரம் அரை மாத்திரையாக குறுகி ஒலிப்பதே குற்றியலிகரம் எனப்படும்.

6. குற்றியலிகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   குற்றியலிகரம் இரண்டு வகைப்படும். அவை தனிமொழிக் குற்றியலிகரம் மற்றும் புணர்மொழிக் குற்றியலிகரம்.

7. தனிமொழிக் குற்றியலிகரத்தை விளக்குக.
   மியா என்ற அசைச்சொல்லில் “ம்” என்ற எழுத்தோடு சேர்ந்து இகரம் குறுகும். இதில் “ம்” என்ற எழுத்திற்குப் பின் யகரம் வருவதால் குறைந்து ஒலிக்கிறது. இதுவே தனிமொழிக் குற்றியலிகரம் ஆகும்.
   எ.கா. கேண்மியா, உண்மியா

8. புணர்மொழிக் குற்றியலிகரம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

புணர்மொழி என்பது இரண்டு சொற்கள் சேர்ந்து வருவதைக் குறிக்கும். புணர்மொழிக் குற்றியலிகரம் என்பது இரண்டு சொற்கள் சேரும்போது உருவாகும் குற்றியலிகரம் ஆகும். முதலில் வரும் சொல்லின் இறுதியில் குற்றியலுகர எழுத்து வந்து, அடுத்து வரும் சொல் 'ய' என்ற எழுத்தில் தொடங்கும்போது, குற்றியலுகரத்தில் உள்ள உகரம், இகரமாய் திரியும். அப்படித் திரிந்து வரும் இகரம் குற்றியலுகரம் போலவே அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்.

எ.கா. நாடு (ட் + உ) + யாது = நாடியாது (ட் + இ = டி)

## 5. வல்லவனுக்கு வல்லவன்

**பக்கம் 29**

**அ) பிரித்து எழுதுக.**

1. அனுமதி + அளித்தார் 2. வேறுபாடு + இன்றி
3. கண்டு + அறிந்து 4. இரவு + ஓடு 5. காதின் + உள்ளே

**ஆ) சேர்த்து எழுதுக.**

1. வாயடைத்து 2. கரவொலி 3. அறிவுரை
4. பெருந்தன்மை 5. பரிசளித்தார்

**இ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. முட்டாள் 2. வெற்றி 3. மகிழ்ச்சி
4. வெளியே 5. பொய்

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. வித்யாசாகரின் திறமை என்ன? அவன் எதை நிரூபிக்க வேண்டுமென எண்ணினான்?

வித்யாசாகர் அழகிய தங்க சிலைகளை செய்யக்கூடிய ஒரு திறமையான சிற்பி ஆவான். உலகிலுள்ள அனைத்து அறிவாளிகளையும் தோற்கடித்து, அவனே உலகின் தலைசிறந்த அறிவாளி என்பதை நிரூபிக்க எண்ணினான்.

2. சிலைகளை மன்னர்களிடம் காண்பித்த பிறகு வித்யாசாகர் விதித்த நிபந்தனைகள் என்ன?

ஒவ்வொரு சிலையிலும் மறைந்திருக்கும் தத்துவம் என்ன என்பதை கண்டறிந்து இரண்டு நாட்களில் கூற வேண்டும். அவ்வாறு கண்டுபிடித்துவிட்டால் அந்தச் சிலைகளையும், மேற்கொண்டு பத்தாயிரம் பொற்காசுகளையும் தருவதாகவும், ஒருவேளை

கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் அந்தச் சிலைகளின் எடைக்கு நிகரான தங்கத்தையும், பத்தாயிரம் பொற்காசுகளையும் அவனுக்கு தரவேண்டும் எனவும் கூறினான்.

3. முதல் சிலையைப் பற்றி தெனாலி ராமன் கூறியவற்றை எழுதுக.

முதல் சிலையானது ஓர் உளறுவாயனைக் குறிப்பதாகவும், எந்தச் செய்தியைக் யார் கூறக் கேட்டாலும், அதன் உண்மைப் பொருளை ஆராயாமல், அந்தச் செய்தியை ஊர் முழுவதும் சொல்லக் கூடிய தன்மை கொண்டவர்களையே அந்தச் சிலை குறிக்கிறது எனவும் கூறினான்.

4. மூன்றாம் சிலையைப் பற்றி தெனாலி ராமன் என்ன கூறினான்?

மூன்றாவது சிலையானது ஓர் உத்தமனைக் குறிப்பதாகவும், எந்தச் செய்தியை யார் கூறக் கேட்டாலும் அந்தச் செய்தியின் உண்மைப் பொருளை ஆராய்ந்தறிபவரையே அந்தச் சிலை குறிப்பதாகவும் தெனாலி ராமன் கூறினான். மேலும், அத்தகைய தன்மை கொண்டவர்கள், ஒரு காதில் வாங்கிய செய்தியை மற்றொரு காதின் வழியாக வெளிவிட மாட்டார்கள்; வாயின் வழியாக உளரவும் மாட்டார்கள் எனவும் கூறினான்.

5. ‘‘வல்லவனுக்கு வல்லவன்’’ கதையின் நீதி யாது?

அகந்தை, ஆணவம், பொறாமை போன்றவற்றை தவிர்த்து, அடக்கத்துடன் வாழ்வதே சிறந்த வாழ்க்கை என்பதை அனைவரும் உணர வேண்டும். ஒருவன் அடக்கமாக வாழ்ந்தால் அவனது அடக்கம் நல்லவர்களால் போற்றப்படும். அதுவே அவனுக்குப் புகழையும், பெருமையையும் பெற்றுத் தரும். அதுமட்டுமல்லாமல் எவர் எந்தக் கருத்தைக் கூறினாலும், அக்கருத்தின் உண்மை என்னவென்று ஆராய்ந்து அறிவதே சிறந்த அறிவு என்பதே ‘‘வல்லவனுக்கு வல்லவன்’’ கதை உணர்த்தும் நீதி ஆகும்.

## 6. நாலடியார்

**பக்கங்கள் 32-33**

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அ) கற்பவர்
2. இ) கனைகடல்
3. ஆ) நட்பு
4. இ) தண்
5. அ) 3

### ஆ) பிரித்து எழுதுக.

1. கரை + இல
2. நீர் + ஒழிய
3. பால் + உண்
4. நல்ல + அறிவு

**இ) சேர்த்து எழுதுக.**

1. நாலடியார் 2. நானூறு 3. பாதிரிப்பூ
4. கற்றறிந்தார் 5. பண்பிலா

**ஈ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பல 2. அடி 3. பிரிந்து
4. நிறைவு 5. செயற்கை

**உ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. எதற்கு கரைகள் கிடையாது? ஏன்?

கல்விக்கு கரைகள் கிடையாது. கல்வி அளவில்லாமல் பரந்து விரிந்திருக்கிறது.

2. நூல்களை எவ்வாறு கற்க வேண்டும்?

பாலுடன் நீரும் கலந்து இருக்கும்போது, அதிலிருந்து நீரை நீக்கி விட்டு பாலை மட்டும் தனியாகப் பிரித்தெடுத்து பருகும் அன்னப் பறவையைப் போல, பயனுள்ள நூல்களை மட்டுமே தெளிவாக ஆராய்ந்து கற்க வேண்டும்.

3. நன்கு கல்வி கற்றோருடன் கொள்ளும் நட்பு எத்தகையது?

நன்கு கல்வி கற்றோருடன் கொள்ளும் நட்பு என்பது கரும்பின் நுனியிலிருந்து அடி நோக்கித் தின்பதுபோல, நாளாக நாளாக அதன் இனிமை அதிகரிக்கும்.

4. கல்லாதவர் நல்லறிவுப் பெறும் வழி யாது?

கல்வி கல்லாதவர்கள் நன்கு கற்றவர்களோடு நாள்தோறும் நட்பு கொண்டு பழகுவதே நல்லறிவைப் பெறும் வழி ஆகும்.

5. "நாலடியார்" – நூல் அமைப்பினை விவரி.

நாலடியார் நூலில் அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பிரிவுகளும், 40 அதிகாரங்கள் மற்றும் 12 இயல்களும் உள்ளன.

**ஊ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. "கல்வி கரையில" எனத் தொடங்கும் பாடலின் பொருளை எழுதுக.

கல்விக்கு கரைகள் இல்லை. அது அளவில்லாமல் பரந்து விரிந்துள்ளது. அப்படிப்பட்ட கல்வியைக் கற்பதற்கு நமக்கு இருக்கும் நாட்களோ மிக குறைவாகும். அந்நாட்களில் ஏற்படும் நோய்கள் பலவாகும். பாலுடன் நீரும் கலந்து இருக்கும்போது, அதிலிருந்து நீரை நீக்கி விட்டு பாலை மட்டும் தனியாகப் பிரித்தெடுத்து பருகும் அன்னப் பறவையைப் போல, பயனுள்ள நூல்களை மட்டுமே தெளிவாக ஆராய்ந்து கற்க வேண்டும்.

2. கல்வி கற்றோர், கல்லாதோரின் நட்பு எத்தகையது என்பதை விவரி.

கல்வி கற்றோருடன் கொள்ளும் நட்பு என்பது கரும்பின் நுனியிலிருந்து அடி நோக்கித் தின்பது போல, நாளாக நாளாக அதன் இனிமை அதிகரிக்கும். நற்பண்பும், நெஞ்சில் ஈரமும் இல்லாத கல்வி கற்காதவரிடம் கொள்ளும் நட்பு என்பது கரும்பின் வேர் பகுதியிலிருந்து மேல் நோக்கி தின்பது போல ஆரம்பத்தில் இனித்தாலும் பிறகு அதன் இனிமை குறைந்துவிடும்.

3. நாலடியார் – குறிப்பு வரைக.

நாலடியார் = நான்கு + அடி + ஆர். பதினெண்கீழ்க்கணக்கு நீதி நூல்களில் ஒன்று நாலடியார் ஆகும். இது சமண முனிவர்கள் பலரால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகும். இந்நூல் நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. எனவே, இதற்கு "நாலடி நானூறு" என்ற சிறப்புப் பெயரும் உண்டு. மேலும் "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழி மூலமாக உலகப் புகழ்பெற்ற நீதி நூலான திருக்குறளுக்கு இணையாகவும் போற்றப்படுகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார் ஆகும். இந்நூலை முப்பாலாக பகுத்தவர் தருமர்; தொகுத்து அதிகாரம் வகுத்தவர் பதுமனார். திருக்குறளின் அமைப்பைப் போலவே நாலடியாரிலும் அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பிரிவுகள் உள்ளன. மேலும் 40 அதிகாரங்கள் மற்றும் 12 இயல்களும் உள்ளன. நாலடியாரை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

## 7. திருக்குறள்

**பக்கங்கள் 36-37**

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஒழுக்கம்
2. பொறாமை
3. மேன்மை
4. பொறாமை
5. தீயொழுக்கம்

### ஆ) பிரித்து எழுதுக.

1. நன்மை + ஒழுக்கம்
2. தீமை + ஒழுக்கம்
3. பரிந்து + ஓம்பி
4. அழுக்காறு + உடையான்
5. ஒழுக்கம் + இலான்

### இ) எதிர்ச்சொல் எழுதுக.

1. இன்பம்
2. ஒழுக்கமின்மை
3. கெடாது
4. தாழ்வு
5. தீமை

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஒருவனுக்கு மேன்மையைத் தருவது எது?
   ஒருவனுக்கு மேன்மையைத் தருவது ஒழுக்கம் ஒன்றே ஆகும்.

2. "ஒழுக்கம் உடைமை குடிமை" – குறள் விளக்கம் தருக.
   ஒழுக்கம் உடையவராக வாழ்தலே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும். ஒழுக்கம் தவறுகிறவர்கள் யாராயினும் அவர்கள் இழிந்த குடியில் பிறந்தவர்களாகவே கருதப்படுவர்.

3. உயர்வை அடையும் வழி யாது? பெரும்பழியைத் தருவது எது?
   ஒழுக்கத்தால் எவரும் உயர்வை அடைவர். ஒழுக்கத்திலிருந்து தவறினால் அடையத்தகாத பெரும்பழியை அடைவர்.

4. ஒருவனின் நன்மைக்கும், துன்பத்திற்கும் காரணமாக அமைவது யாது?
   ஒருவனுக்கு நல்லொழுக்கம் வாழ்வில் நன்மைக்குக் காரணமாக அமையும். தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தையே கொடுக்கும்.

5. அறிவில்லாதவராகக் கருதப்படுபவர் யார்?
   உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றறிந்த போதிலும் அறிவில்லாதவராகவே கருதப்படுவார்.

## 8. கல்வியின் பெருமை

**பக்கம் 44**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கல்வி
2. அகழ்ந்தெடுத்தல்
3. அரசனைக்
4. கல்வி
5. குருகுலக் கல்வி முறை

**ஆ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. கல்வி என்றால் என்ன?
   கல்வி என்பது அறிவு, திறமைகள், முயற்சிகள் போன்றவற்றை பெறுதல் மற்றும் பகிர்தல் பற்றிய ஒரு தொடர்ச்சியான செயல்பாடாகும். கல்வியே ஒரு சிறந்த சமுதாயத்தின் அடித்தளமாக கருதப்படுகிறது.

2. மக்களுக்கு கண் போன்றது எது? ஏன்?
   மனிதர்களுக்கு கல்வி என்பது கண் போன்றது. கண் இல்லையென்றால் இந்த உலகம் முழுவதும் அவர்களுக்கு இருளாகவே காட்சியளிக்கும். அதுபோலவே கல்வியறிவு இல்லையென்றால் மனிதர்களின் உள்ளத்தை இருள் சூழ்ந்துவிடும்.

3. உலகிலுள்ள செல்வங்களுள் அழியாச் செல்வம் எது? ஏன்?

உலகிலுள்ள செல்வங்களுள் அழியாச் செல்வம் கல்வி ஒன்றே ஆகும். உலகிலுள்ள செல்வங்கள் அனைத்தும் நீராலும், நெருப்பாலும் அழிந்துவிடும். ஆனால், கல்வி என்னும் செல்வத்தை நீராலும், நெருப்பாலும் அழிக்க முடியாது; அரசனாலும் வெல்ல முடியாது; கள்வர்களாலும் களவாட முடியாது; அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் குறையாது.

4. குருகுலக் கல்வியில் கற்பிக்கப்பட்டவை எவை?

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற ஒழுங்கு முறைகள் மாணவர்களுக்கு முதன்மைப் பாடமாக கற்பிக்கப் பட்டது. தியானம், யோகா, போர்ப் பயிற்சி போன்றவையும் மாணவர்களின் கல்வியுடன் சேர்த்து கற்பிக்கப்பட்டது.

5. கல்வியின் நோக்கம் யாது?

மக்களுக்கான நல்ல பழக்க வழக்கங்கள், சீரிய மனப்பான்மை, ஆழ்ந்த திறமை போன்றவற்றை அளித்து அவர்களை நிறைவான மற்றும் போற்றத்தக்க வாழ்வினை வாழ வழிசெய்வதே கல்வியின் நோக்கமாகும்.

**இ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. கல்வியின் சிறப்புகளை எழுதுக.

கல்வி ஒன்றே ஒருவனை அறிவாளி ஆக்குகிறது. கல்வி தன்னை முறைப்படி கற்றுக்கொண்டவரை மட்டும் உயர்த்தாமல், அவரை சார்ந்தவர்கள், அவர் வாழக் கூடிய சமுதாயம், நாடு போன்றவற்றையும் உயர்த்த உதவி செய்கிறது. முறையாகக் கல்வி கற்றுத் தேர்ந்தவர்கள் இந்த உலகில் எந்த இடத்திற்கு சென்றாலும் அவர்களை அனைவரும் மதித்து போற்றுவார்கள். அதற்கு காரணமாக அமைவது அவர்கள் பெற்றுள்ள கல்வி அறிவே ஆகும். நாட்டை ஆளும் அரசனையும், குற்றமின்றி கல்வி கற்றவனையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அரசனைக் காட்டிலும் கல்வி கற்றவனே சிறப்புடையவன். ஏனெனில் அரசனுக்கு சிறப்பு அவன் ஆட்சி புரிகின்ற அந்த நாட்டிற்குள் மட்டுமே ஆகும். ஆனால், கல்வி கற்றவனோ அவன் செல்லும் இடமெல்லாம் சிறப்புடன் புகழ்ந்து போற்றப்படுவான். கல்வியின் சிறப்பு யாதெனில், கல்வி கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பைப் பெற்றுத் தருவதாகும்.

2. "கல்வியின் பெருமை" பாடப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள திருக்குறள்களையும், அவற்றின் பொருள்களையும் எழுதுக.

- கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
  புண்ணுடையர் கல்லா தவர்.

**பொருள்:** கல்வியை முறைப்படி கற்றவர்களே உண்மையான கண்களை உடையவர் ஆவார். அத்தகைய கல்வியை கல்லாதோர் முகத்தில் இரண்டு புண்களையே உடையவர் ஆவார்.

- தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
  கற்றனைத் தூறும் அறிவு.

**பொருள்:** ஆற்று மணலை தோண்டத் தோண்ட ஊற்று நீரானது ஊறிக்கொண்டே இருக்கும். அதுபோலவே மக்களின் கல்வி அறிவானது கற்கக் கற்க வளர்ந்து கொண்டே இருக்கும்.

- எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
  கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

**பொருள்:** எண் எனப்படும் அறிவியலும், எழுத்து எனப்படும் கலை இயலும் ஆகிய இரண்டும் மக்களுக்கு இன்றியமையாதவையாகும். இவ்விரண்டும் இந்த உலகில் வாழும் மக்களின் இரண்டு கண்களைப் போன்றதாகும்.

- விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
  கற்றாரோடு ஏனை யவர்.

**பொருள்:** மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமிடையே என்ன வேற்றுமை உள்ளதோ, அதே அளவு வேற்றுமை நல்லறிவை வளர்க்கும் நூல்களைப் படித்தவர்களுக்கும், அந்த நூல்களைப் படிக்காதவர்களுக்கும் இடையே உள்ளது. கல்வியறிவு இல்லாதோர் அனைவரும் விலங்குகளுக்கு சமமானவர்கள் ஆவார்கள்.

- கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
  மாடல்ல மற்றை யவை.

**பொருள்:** கல்வி ஒன்றே ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் ஆகும். கல்வியைத் தவிர மற்ற செல்வங்கள் அனைத்தும் அத்தகைய சிறப்புடைய செல்வங்கள் ஆகாது.

**3.** ஆரம்பகாலக் கல்வி முறைப் பற்றி குறிப்பு எழுதுக.

குருகுலக் கல்வி முறையே பண்டையக் கால கல்வி முறையாகும். மாணவர்கள் அனைவரும் தங்களின் குருக்களின் இல்லங்களில் தங்கி கல்வி பயின்றனர். முழுமையான கல்வியை கற்றல், ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்தல், திறமைகளை வளர்த்துக் கொள்ளுதல் போன்றவை அன்றையக் கால கல்வியின் நோக்கமாக இருந்தது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற ஒழுங்கு முறைகள் மாணவர்களுக்கு முதன்மைப் பாடமாக கற்பிக்கப்பட்டது. தியானம், யோகா, போர்ப் பயிற்சி போன்றவையும் மாணவர்களின் கல்வியுடன் சேர்த்து கற்பிக்கப்பட்டது. குருகுலக் கல்விக்குப் பிறகு திண்ணைக் கல்வி, மரத்தடிக் கல்வி, வகுப்பறைக் கல்வி,

இணையக் கல்வி என இன்று வரை கல்வி கற்பிக்கும் முறையானது மாற்றமடைந்து கொண்டே இருக்கிறது.

## 9. நான்காம், ஐந்தாம், ஆறாம் வேற்றுமை

**பக்கங்கள் 48-49**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கு 2. ஆக 3. நான்கு
4. கிழமைப் பொருள் 5. தற்கிழமை

**ஆ) பொருத்துக.**

1. பகை 2. தகுதி 3. முறை
4. கொடை 5. அதுவாதல்

**இ) தற்கிழமை, பிறிதின் கிழமைகளை எடுத்து எழுதுக.**

**தற்கிழமை:** எனது மாடு, முருகனது கை, யானையது கால், பூனையது வால், புலியது கண், குமரனது கால், வளவனது கருமை

**பிறிதின் கிழமை:** உனது வீடு, அவனது புத்தகம், வேலனது பை

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. நான்காம் வேற்றுமை என்றால் என்ன? அதன் உருபு யாது?
ஒரு சொற்றொடரில் பெயர்ச்சொல்லானது 'கு' எனும் வேற்றுமை உருபை ஏற்றுப் பொருள் வேறுபாட்டை உணர்த்துவது நான்காம் வேற்றுமை அல்லது கொடை வேற்றுமை எனப்படும். 'கு' என்பது நான்காம் வேற்றுமைக்கான உருபாகும்.

2. நான்காம் வேற்றுமை எவ்வித பொருள்களில் வருமென்பதை பட்டியலிடுக.
நான்காம் வேற்றுமையானது கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என்னும் ஏழு பொருள்களில் வரும்.

3. நான்காம் வேற்றுமையின் சொல்லுருபுகள் யாவை? அவற்றிற்கு சான்றுகள் தருக.
'ஆக', 'பொருட்டு', 'நிமித்தம்' என்பன நான்காம் வேற்றுமையின் சொல்லுருபுகள் ஆகும்.
எ.கா.
   - பணத்திற்காக வேலை செய்தான். (ஆக)
   - மதியழகன் பொருட்டு அன்பரசன் பரிசைப் பெற்றான். (பொருட்டு)
   - தேர்வின் நிமித்தம் கண்விழித்து படித்தான். (நிமித்தம்)

4. ஐந்தாம் வேற்றுமையை சான்றுடன் விளக்கி, அதன் உருபுகளையும் எழுதுக.

தன்மை, அளவு, வடிவம், வண்ணம், சுவை போன்ற பண்புகளை தெளிவாக உணர்த்தி வேறுபடுத்திக் காட்டுவதே ஐந்தாம் வேற்றுமை ஆகும். 'இல்', 'இன்' என்பன ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் ஆகும்.

எ.கா.
- கொடையில் சிறந்தவர் பாரி.
- தமிழகத்தின் தெற்கு குமரி.

மேற்கண்ட தொடர்களில் வரும் 'கொடை', 'தமிழகம்' என்னும் பெயர்ச்சொற்களானது 'இல்', 'இன்' என்னும் வேற்றுமை உருபுகளை ஏற்றுப் பொருள் வேறுபாட்டை உணர்த்துகின்றன.

5. ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகள் யாது? எடுத்துக்காட்டுகள் தருக.

'நின்று', 'விட', 'இருந்து', 'காட்டிலும்' என்பன ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகளாக வரும்.

- அரசன் தேரினின்று இறங்கினான். (நின்று)
- பகலை விட இரவு சிறந்தது. (விட)
- கண்ணன் பள்ளியிலிருந்து வந்தான். (இருந்து)
- அன்னையைக் காட்டிலும் அன்பிற் சிறந்தவர் உண்டோ? (காட்டிலும்)

6. ஆறாம் வேற்றுமை என்றால் என்ன?

பெயர்ச்சொல்லின் எழுவாய்ப் பொருளைக் கிழமைப் பொருளாக வேறுபடுத்திக் காட்டுவதே ஆறாம் வேற்றுமையாகும்.

7. ஆறாம் வேற்றுமையின் உருபுகள் யாவை? அவற்றிற்குரிய பொருள் யாது?

'அது', 'ஆது', 'அ' என்பன ஆறாம் வேற்றுமைக்குரிய உருபுகள் ஆகும். இதில் 'அது', 'ஆது' என்ற உருபுகள் ஒருமையைக் குறிக்கவும், 'அ' என்ற உருபு பன்மையைக் குறிக்கவும் பயன்படுகிறது. ஆறாம் வேற்றுமையின் பொருள் கிழமைப் பொருள் ஆகும்.

8. தற்கிழமை என்றால் என்ன? சான்று தருக.

தன்னோடு தொடர்புடைய, ஒற்றுமையுடைய, பிரிக்க முடியாத பொருளை வேறுபடுத்திக் காட்டுவது தற்கிழமைப் பொருள் எனப்படும். உறுப்பு, பண்பு, தொழில், ஒன்றன் கூட்டம், பலவின் கூட்டம், திரிபின் ஆக்கம் போன்ற வகைகளில் தற்கிழமைப் பொருள் வரும்.

எ.கா. கந்தனது விரல். (உறுப்பு தற்கிழமை)

9. பிறிதின் கிழமை என்றால் என்ன? சான்று தருக.

தன்னுடன் ஒற்றுமையல்லாத, தன்னினும் வேறான பிறிதொரு பொருளை வேறுபடுத்திக் காட்டப் பயன்படுவது பிறிதின் கிழமைப் பொருள் ஆகும். பொருள், இடம், காலம் போன்ற பல வகைகளில் பிறிதின் கிழமைப் பொருள் வரும்.

எ.கா. கண்ணனது புத்தகம். (பொருள் பிறிதின் கிழமை)

10. ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

“உடைய” என்பது ஆறாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபு ஆகும். இந்தச் சொல்லுருபானது ஒருமை, பன்மை ஆகிய இரண்டிற்கும் பயன்படும்.

எ.கா.
- சந்திரனுடைய கடை. (ஒருமை)
- வளவனுடைய வீடுகள். (பன்மை)

## 10. முல்லாவும், படைத்தளபதியும்

**பக்கம் 53**

**அ) பிரித்து எழுதுக.**

1. நாட்டில் + உள்ள
2. அறிவு + திறன்
3. கொள்ளை + அடித்து
4. படை + தளபதி
5. அதிர்ச்சி + அடைந்த

**ஆ) சேர்த்து எழுதுக.**

1. அறிவுப்போர்
2. மேற்பாகம்
3. பரிசளித்த
4. இடியோசை
5. பயனில்லை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. முல்லாவிற்கு பக்கத்து நாட்டு அரசன் விடுத்த அழைப்பு யாது?

தனது நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடன் போட்டியிட்டு, அறிவுத்திறனை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்பதே முல்லாவிற்கு பக்கத்து நாட்டு அரசன் விடுத்த அழைப்பு ஆகும்.

2. முல்லாவிற்கு அரசர் அளித்த பரிசு என்ன?

முல்லாவிற்கு அரசர் இரண்டு மாடி வீட்டை பரிசாக அளித்தார்.

3. முல்லா வீட்டின் மேல்பாகத்தை யாருக்கு கொடுக்கச் சொன்னார்? ஏன்?

முல்லா தன் வீட்டின் மேல்பாகத்தை படைத்தளபதிக்கு பரிசாக கொடுக்கச் சொன்னார். அந்த நாட்டில் பல முறை கொள்ளையடித்து

மக்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கிய கொள்ளையர்களைப் பிடித்து வந்த படைத்தளபதிக்கு பரிசு கொடுப்பதாக மன்னர் ஏற்கனவே கூறி இருந்தார்.

4. முல்லா கடப்பாரையால் எதை இடித்தார்? ஏன்?
   முல்லா கடப்பாரையால் தனது வீட்டின் சுவரை இடித்தார். படைத்தளபதிக்கு தக்க பாடம் புகட்டவே அவ்வாறு செய்தார்.

5. “முல்லாவும் படைத்தளபதியும்” என்ற கதையின் நீதியை எழுதுக.
   உள்ளத்தில் பொறாமை, வெறுப்பு ஆகியவை இல்லாமல் வாழும் குணத்தையே நமது வாழ்வின் உரிய ஒழுக்கமாகக் கொள்ள வேண்டும். நாம் பிறர்மீது பொறாமையும், வெறுப்பும் கொண்டு வாழ்ந்தால் அது நமக்கு துன்பத்தையே தரும். இத்தகைய எண்ணங்களை ஒழித்துவிட்டு அன்புடனும், நற்சிந்தனையுடனும் வாழ்வதே நம் வாழ்விற்கு இனிமை தரும்.

## 11. நெல் அடித்தல்

**பக்கம் 57**

**அ) பிரித்து எழுதுக.**

1. மாடு + எல்லாம் 2. நான்கு + கால் 3. கூனல் + கிழவி
4. ஆயிரம் + கண் 5. வயல் + எல்லாம்

**ஆ) சேர்த்து எழுதுக.**

1. மரக்கால் 2. நெற்கூலி 3. காய்கறி
4. சாக்கடையெல்லாம் 5. வழியெல்லாம்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்குத் திசையிலிருந்து வந்த மாடுகள் நெல்லடித்த விதம் பற்றி எழுதுக.
   கிழக்கிலிருந்து வந்த மாடுகள் எல்லாம் கீழே பார்த்துக் கொண்டு மிதித்தன. மேற்கிலிருந்து வந்த மாடுகள் எல்லாம் மேலே பார்த்துக் கொண்டு மிதித்தன. வடக்கிலிருந்து வந்த மாடுகள் எல்லாம் வாரி வாரி மிதித்தன. தெற்கிலிருந்து வந்த மாடுகள் எல்லாம் திரட்டித்திரட்டி மிதித்தன.

2. ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்குக் கூலியாகக் கிடைத்தது என்ன?
   ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு ஒரு மரக்கால் நெல் கூலியாகக் கிடைத்தது.

3. நெல்லை எங்கு, எதில் எடுத்துச் சென்றனர்?
நெல்லை அரண்மனைக்கு மாட்டு வண்டிகளில் எடுத்துச் சென்றனர்.

## 12. திருக்குறள்

**பக்கம் 60**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. உழவுத் தொழில்
2. உழவர்களே
3. எரு இடுதல்
4. நிலமகள்
5. தாங்குதல்

**ஆ) பிரித்து எழுதுக.**

1. உழுது + உண்டு
2. தங்கு + தடை
3. எரு + இடுதல்
4. நன்று + அதன்
5. நிலம் + என்னும்

**இ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. முன்
2. வீழ்வார்
3. வா
4. சில
5. காலை

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. உழவுத் தொழிலே சிறந்தது என வள்ளுவர் கூறுவதன் காரணம் என்ன?
உழவுத் தொழிலில் இருக்கும் நெருக்கடிகளை எண்ணி, வேறு வேறு தொழிலுக்குச் சென்றாலும் உலகம் ஏரின் பின்தான் இயங்குகிறது. எனவே, எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

2. இவ்வுலகில் வாழ்பவர் யார்? பின் செல்பவர் யார்?
பிறர்க்காகவும் உழுது, தாமும் உண்டு வாழ்பவரே வாழ்பவர். மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது, அவர் தருவதை உண்டு, தருபவர் பின்னே செல்பவர் ஆவர்.

3. "உழவினார் கைம்மடங்கின்" எனத் தொடங்கும் குறளின் பொருளை எழுதுக.
நிலத்தில் உழுபவருடைய கை மட்டும் தொழில் செய்யாமல் மடங்கி இருக்குமானால், விரும்புகின்ற எந்தப் பற்றையும் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவியரும் கூட அவரது அறத்தில் நிலைத்து நிற்க முடியாது.

4. எது நல்லது என வள்ளுவர் கூறுகிறார்?
ஏர் உழுதலைவிட எரு இடுதல் நல்லது. இந்த இரண்டும் சேர்ந்து களை நீக்கிய பின், நீர் பாய்ச்சுதலைவிடப் பயிரைக் காவல் காத்தல் நல்லது.

5. யாரைப் பார்த்து நிலமகள் சிரிப்பாள்?

நாம் ஏதும் இல்லாத ஏழை என்று எண்ணி சோம்பி இருப்பவரைக் கண்டால், நிலமகள் தன்னுள் சிரிப்பாள்.

## 13. பழந்தமிழர்களின் உழவுத் தொழில்

**பக்கம் 68**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. உழவர்
2. உழத்தியர்
3. உழுதல்
4. நடுநர்
5. எருவிடுதல்

**ஆ) பொருத்துக.**

1. அச்சாணி
2. நாடு
3. கலப்பை
4. பரம்பு பிடித்தல்
5. பரண்கள்

**இ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. உழவுத் தொழில் என்றால் என்ன?

நிலத்தை நன்றாக, ஆழமாக உழுது விளைச்சலுக்கு ஏற்ற நிலமாக சீரமைக்கும் தொழில் உழவுத் தொழில் ஆகும். உழவுத் தொழில் ஒரு நாட்டின் முதன்மை தொழிலாகவும், முதுகெலும்பாகவும் விளங்குகிறது.

2. உழவர் என்றழைக்கப்படுபவர் யார்?

நிலத்தை நன்றாக உழுது, புழுதியாக்கி, பதப்படுத்தி, நீர்பாய்ச்சி, எரு இட்டு, நெல் முதலிய பயிர்களை விளைவிப்பது போன்ற பயிர் தொழிலை மேற்கொள்வோர் உழவர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

3. ஐவகை நிலங்கள் யாவை?

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன ஐவகை நிலங்கள் ஆகும்.

4. மருதநில உழவர்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

மருத நிலத்தில் உழவுத் தொழில் செய்து வந்த ஆண்களை உழவர் என்றும், பெண்களை உழத்தியர் என்றும் அக்கால மக்கள் குறிப்பிட்டனர். வயலில் உழவுத் தொழில் செய்பவரை "கழனி உழவர்" என்றும் போற்றி சிறப்பித்தனர்.

5. உழவுத் தொழில் நடைபெறும் முறைகள் யாவை?

உழுதல், நிலத்தை சமன் செய்தல், விதைகளை விதைத்தல், நாற்று நடுதல், நீர்ப்பாசனம், எரு இடுதல், களை எடுத்தல், பயிர் பாதுகாப்பு, அறுவடை செய்தல், தூய்மை செய்தல் ஆகியன உழவுத் தொழில் நடைபெறும் முறைகளாகும்.

**ஈ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. உழவின் சிறப்பு பற்றி எழுதுக.

   நிலத்தை நன்றாக உழுது, புழுதியாக்கி, பதப்படுத்தி, நீர்ப்பாய்ச்சி, எரு இட்டு, நெல் முதலிய பயிர்களை விளைவிப்பது போன்ற பயிர் தொழிலை மேற்கொள்வோர் உழவர் என்று அழைக்கப்படுகிறார்கள். உழவர்களே இந்த உலகத்தை தாங்கிக் கொண்டிருக்கும் அச்சாணி என வள்ளுவர் கூறுகிறார். மேலும், இந்த பரந்த உலகத்தில் வாழக்கூடிய மக்களில் உழவுத் தொழில் செய்வபரே முழு உரிமையோடு வாழ தகுதியானவர்கள் எனவும், மற்றவர்கள் அனைவரும் அவர்களைத் தொழுது, அவர் தருவதை உண்டு, அவரின் பின்னே செல்பவர் எனவும் வள்ளுவர் கூறுகிறார். நிலத்தை நன்றாக, ஆழமாக உழுது விளைச்சலுக்கு ஏற்ற நிலமாக சீரமைக்கும் தொழில் உழவுத் தொழில் ஆகும். “உழத்தல்” என்பது முயலும் முயற்சியை குறிக்கும். இத்தகைய அரும்பெரும் முயற்சிகளை மேற்கொள்வதே உழவுத் தொழிலின் சிறப்பாகும்.

2. குறிஞ்சி நில மக்களின் உழவுத் தொழிலை விளக்குக.

   குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த பகுதியாகும். ஆரம்பத்தில் குறிஞ்சி நில மக்களின் அடிப்படைத் தொழில் வேட்டை ஆடுதல், தேன் எடுத்தல், கிழங்கு எடுத்தல் போன்றவையாகும். அதன் பிறகு தினை வளர்த்தல் போன்ற தொழில்களை செய்ய தொடங்கினர் என இலக்கியங்கள் கூறுகின்றன.

   அந்தக் காலத்தில் நிலத்தை உழுவதற்கான கருவிகள் ஏதும் இல்லாத காரணத்தால், மலைகளில் வாழக்கூடிய பன்றிகள் கிழங்குகளை உண்பதற்காக மண்ணைத் தோண்டும்போது ஏற்படுத்திய குழிகளில் குறிஞ்சி நில மக்கள் தினையை விதைத்தனர். அதன்பிறகு அது செழித்து வளர்ந்து அவர்களுக்கு பயனளித்தது. இவ்வாறே குறிஞ்சி நில மக்கள் உழவுத் தொழிலை மேற்கொண்டனர்.

3. உழுதல் என்றால் என்ன?

   உழவுத் தொழிலின் தொடக்கமாக இருப்பது உழுதல் நிகழ்வாகும். உழுதல் என்பது நிலத்தின் மேற்பரப்பில் இருக்கும் கடினமான மண்ணை மென்மையாக மாற்ற அதை மேலும் கீழுமாகப் புரட்டும் செயலாகும். இச்செயல் முறைப்படி செய்யப்படவில்லை என்றால் விளைச்சல் செழிக்காது. பண்டைய மக்கள் நிலங்களை நன்செய், புன்செய் என்னும் இரண்டு பிரிவுகளாக பிரித்தனர். பின்னர் ஏர் கலப்பைக் கொண்டு ஆழமாக உழுது, மண்ணை மேலும், கீழுமாக புரட்டி நன்கு உலர விட்டு பதப்படுத்தினர்.

நன்கு பயிற்சி பெற்ற வலிமையான எருதுகளை, பெண் யானையின் வாயைப் போன்று மடிந்து வளைந்த அமைப்பையுடைய பெரிய நாஞ்சில் கலப்பைகளில் பூட்டி, முழுக் கொழுவும் மண்ணில் புதைந்து மறைந்து போகும்படி ஆழமாக உழுதனர் என்பதையும், நன்செய் நிலங்களில் சேற்று உழவும், புன்செய் நிலங்களில் புழுதி உழவும் செய்தனர் என்பதையும் பழங்கால தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

4. பழந்தமிழர்கள் விதை விதைத்தல் முறையை விவரி.

நிலத்தை நன்றாக உழவு செய்து பண்படுத்திய பிறகு விதைகளை விதைத்தல் செயல் நடைபெறும். பண்டையக் காலத்தில் புன்செய், நன்செய் நிலங்களுக்கு ஏற்ற வண்ணம் பயிர்களை பயிரிட்டனர். புன்செய் நிலங்களில் விதைகளை அப்படியே விதைத்தல், நன்செய் நிலங்களில் நாற்று விட்டு நடவு செய்தல் போன்ற முறைகளை பின்பற்றி உழவுத் தொழில் செய்தனர். புன்செய் நிலங்களான குறிஞ்சி மற்றும் முல்லையில் தினை, வரகு, பயிறு, உளுந்து போன்ற பயிர்களின் விதைகளை விதைத்தனர். நீர் வளமிக்க மருதம் மற்றும் நெய்தலில் நெல், வாழை, கரும்பு போன்றவற்றை பயிரிட்டனர். அக்கால தமிழர்கள் விதைகள் விதைப்பு முறையில் புழுதி விதை விதைத்தல், சேற்று விதை விதைத்தல் ஆகிய இருவகைகளைப் பின்பற்றினர். நிலத்தை நன்றாக உழுது, உலரவிட்டு, நீர் பாய்ச்சி விதைகளை விதைத்தனர். இவ்வகையான விதைப்பு முறை கோடைக்காலம் அல்லது நீர்த் தட்டுப்பாடு மிகுந்த காலங்களில் நடைபெற்றது.

5. பயிர் பாதுகாப்பின் அவசியத்தையும், பழங்காலத் தமிழர்கள் எவ்வாறு பயிர்களைக் காத்தனர் என்பதையும் எழுதுக.

பயிர்கள் நன்றாக வளர்ந்த பின்னர் அந்தப் பயிர்களை பாதுகாப்பது மிக முக்கியமானதாகும். பூச்சிகள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றிடமிருந்து பயிர்களைக் காப்பதே பயிர்ப் பாதுகாப்பு எனப்படும். இந்த நடைமுறையானது பண்டையகாலத் தமிழர்களிடம் காணப்பட்டதை பல்வேறு இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. நீண்டு வளர்ந்த தினைக் கதிர்களை கிளிகள் கொத்தித் தின்ன வந்ததையும், அதை விரட்டி அப்பயிர்களை மக்கள் காவல் காத்தனர் என்ற செய்தியையும் ஐந்திணைப் பாடல்களின் மூலமாக அறிய முடிகிறது. பயிர்களை சேதப்படுத்தும் பன்றிகள், யானைகள் போன்ற காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாக்க வயல்வெளிகளில் பரண்களை அமைத்து பாதுகாத்தனர். பகலில் பறவைகளிடமிருந்து பெண்களும், இரவில் விலங்குகளிடமிருந்து ஆண்களும்

பயிர்களை பாதுகாத்து வந்தனர் என்பதையும் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

## 14. வழக்கு

**பக்கங்கள் 72-73**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வழக்கியல் 2. மூன்று 3. இலக்கணமுடையது
4. மரூஉ 5. சான்றோர்

**ஆ) பொருத்துக.**

1. இன்சுவை படித்தாள் 2. வாய்க்கால் 3. புதுவை
4. ஒன்றுக்குப் போனான் 5. இறைவனடி சேர்ந்தார் 6. பறி

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. வழக்கு என்றால் என்ன?

நமது முன்னோர்கள் எந்தெந்த சொற்களை என்னென்ன பொருட்களில் வழங்கி வந்தனரோ, நாமும் அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவது வழக்கு எனப்படும்.

2. வழக்கு எத்தனை வகைப்படும் அவை யாவை?

வழக்கு இரண்டு வகைப்படும். அவை இயல்பு வழக்கு மற்றும் தகுதி வழக்கு.

3. இயல்பு வழக்கு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

ஒரு பொருளைக் குறிப்பிடுவதற்கு எந்தச் சொல் இயல்பாக வருகிறதோ, அந்தச் சொல்லாலேயே அந்தப் பொருளை வழங்குவது இயல்பு வழக்கு எனப்படும். இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என இயல்பு வழக்கு மூன்று வகைப்படும்.

4. இலக்கணமுடையது என்பது யாது? சான்று தருக.

தமிழில் இலக்கண நெறிப்படியே சொற்களை வழங்குவது இலக்கணமுடையது எனப்படும்.

எ.கா. மலர்விழி பாடினாள்.

மேற்கண்ட தொடரில் உள்ள சொற்கள் இயல்பாகவும், இலக்கண நெறிப்படியும் அமைந்து பொருளை உணர்த்துகின்றன.

5. இலக்கணப்போலியை விளக்குக.

இலக்கண நெறிகளுக்கு பொருந்தாததாக இருப்பினும் இலக்கணமுடையது போலத் தொன்றுத் தொட்டு வழங்கிவரும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | இலக்கணப்போலி | | இலக்கணமுடையது |
| | புறநகர் | – | நகர்ப்புறம் |
| | வாயில் | – | இல்வாய் |
| | வாய்க்கால் | – | கால்வாய் |

**6.** மரூஉ என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

இலக்கண நெறியிலிருந்து சிதைந்து சொல்லின் வடிவம் மாறி வழங்கப்படும் சொற்கள் மரூஉ எனப்படும். நாம் சொற்களை பயன்படுத்தும்போது எல்லா இடங்களிலும் முழுமையான வடிவத்தில் பயன்படுத்துவதில்லை.

எ.கா. திருச்சிராப்பள்ளி – திருச்சி

மேற்கண்ட எடுத்துக்காட்டில் உள்ளது போல "திருச்சிராப்பள்ளி" என்னும் பெயரை "திருச்சி" என்றே பயன்படுத்துகிறோம். "திருச்சி" என்பது மரூஉ ஆகும்.

**7.** தகுதி வழக்கு என்பது யாது? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?

ஒரு பொருளைக் குறிக்க இயல்பாக அமைந்த சொல்லால் அப்பொருளை குறிப்பது தகுதியன்று என்று கருதி அதை மற்றொரு தகுதியான சொல்லால் குறிப்பிடுவது தகுதி வழக்கு எனப்படும். தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவை,

- இடக்கரடக்கல்
- மங்கலம்
- குழூஉக்குறி

**8.** "குழந்தை வெளியே போய்விட்டது." – இத்தொடரை விளக்குக.

"குழந்தை மலம் இருந்து விட்டது" என்பதை அப்படியே கூறாமல் "குழந்தை வெளியே போய்விட்டது" என்ற மற்றொரு சொற்றொடரால் கூறுவதே இடக்கரடக்கல் ஆகும். இத்தொடரில் "மலம்" என்ற சொல்லின் இடக்கரடக்கலாக "வெளியே" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**9.** மங்கலம் என்றால் என்ன?

மங்கலமற்ற சொற்களைக் கூறாமல், அச்சொற்களுக்குப் பதிலாக மங்கலமான சொற்களை பயன்படுத்துவதே மங்கலம் எனப்படும்.

எ.கா. செத்துவிட்டார் – துஞ்சினார், இறைவனடி சேர்ந்தார்

**10.** குழூஉக்குறி என்பது யாது? எடுத்துக்காட்டு தருக.

ஒரு குறிப்பிட்ட குழுவைச் சார்ந்தவர்கள் ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த பெயரைத் தவிர்த்து, மற்றவர்களுக்குப்

புரியாதபடியும், தம் குழுவில் உள்ளவர்களுக்கு மட்டுமே புரியும்படியும் அடையாளச் சொற்களால் குறிப்பிட்டு வழங்கும் சொற்கள் குழூஉக்குறி எனப்படும்.

எ.கா. பொற்கொல்லர்கள் பொன்னைப் “பறி” என்னும் சொல்லைக் கொண்டு குறிப்பிடுவார்கள்.

## 15. யாருடைய மாடு?

**பக்கம் 78**

### அ) பிரித்து எழுதுக.

1. நோய் + தொற்று
2. மனம் + கவலை
3. உருண்டு + ஓடின
4. ஆணை + இட்டார்
5. கூடி + இருந்த

### ஆ) சேர்த்து எழுதுக.

1. நாளன்று
2. நீதிமன்றம்
3. மூன்றுடன்
4. புத்துணர்ச்சி
5. என்னுடைய

### இ) வினாக்களுக்கு விடையளி.

1. ஆறுமுகம் என்பவன் யார்? அவனுக்கு பிடித்தது என்ன?

   ஆறுமுகம் என்பவன் ஒரு வியாபாரி. அவனுக்கு பிடித்தது அவனது மாடுகள் ஆகும். அவன் மாடுகளின் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தான்.

2. ஏகாம்பரம் செய்த காரியம் யாது?

   ஏகாம்பரம், ஆறுமுகத்தின் மாட்டு மந்தையிலிருந்து மூன்று கிடாரிக் கன்றுகளைப் பிரித்து தனது மாட்டு மந்தையில் சேர்த்துக் கொண்டான். பின்னர் தனது காளைக் கன்றுகளில் மூன்றைப் பிரித்து ஆறுமுகத்தின் மாட்டு மந்தையில் சேர்த்து விட்டான்.

3. ஆறுமுகம் யாரிடம் சென்று நீதி கேட்டான்?

   ஆறுமுகம் நீதிபதி மரியாதைராமனிடம் சென்று நீதி கேட்டான்.

4. மரியாதைராமன் கீரைகளை எவ்வாறு வளர்க்கச் சொன்னார்?

   மரியாதைராமன் தனது வேலைக்காரனை அழைத்து தனது தோட்டத்தில் மூன்று பாத்திகளை அமைக்கச் சொன்னார். முதல் பாத்தியில் மக்கிய குப்பையின் எருவையும், இரண்டாவது பாத்தியில் ஆட்டின் எருவையும், மூன்றாவது பாத்தியில் மாட்டின் எருவையும் போட்டு கீரைச் செடிகளை நட்டு வளர்க்கச் சொன்னார்.

5. “யாருடைய மாடு?” என்ற கதையின் நீதியை எழுதுக.

   பேராசை, பிறர் பொருளுக்கு ஆசைப்படுதல் போன்றவை மனிதத்

தன்மையை அழிக்கும் செயல்கள் ஆகும். அடுத்தவர்களின் பொருளை அவர்களுக்குத் தெரியாமல் திருடலாம் என்று நினைப்பது மிகப் பெரிய தீமை ஆகும். அடுத்தவர்க்குரிய எந்தப் பொருளின் மீதும் ஆசை கொள்ளாமல் வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும். எனவே, தீய குணங்களை விட்டுவிட்டு நல்ல எண்ணத்துடன் வாழ வேண்டும்.

## 16. காலை அழகு

**பக்கம் 81**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பெரு 2. மாலை 3. இறப்பு 4. குறுகி 5. வெயில்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. கவிஞரேறு வாணிதாசன் எங்கு, எப்போது பிறந்தார்?
   கவிஞரேறு வாணிதாசன் புதுச்சேரியை அடுத்த வில்லியனூரில் 1951 ஆம் ஆண்டு ஜுலை 22 ஆம் நாள் பிறந்தார்.

2. வாணிதாசனின் பெற்றோர் யார்?
   வாணிதாசனின் பெற்றோர் அரங்க. திருக்காமு மற்றும் துளசியம்மாள் ஆவர்.

3. வாணிதாசன் இயற்றிய நூல்களின் பெயர்களை குறிப்பிடுக.
   இனிக்கும் பாட்டு, எழில் விருத்தம், குழந்தை இலக்கியம், கொடி முல்லை, தமிழச்சி, தொடுவானம், பொங்கற் பரிசு, வாணிதாசன் கவிதைகள் (தொகுதி 1, 2, 3) ஆகியன வாணிதாசன் இயற்றிய நூல்கள் ஆகும்.

4. வாணிதாசனின் சிறப்புப் பெயர்களை எழுதுக.
   கவிஞரேறு, பாவலர் மணி, தமிழ்நாட்டின் வேர்ட்ஸ்வொர்த், தமிழ்நாட்டுத் தாகூர் ஆகியன வாணிதாசனின் சிறப்புப் பெயர்கள் ஆகும்.

5. “காலை அழகு” பாடலின் பொருளை எழுதுக.
   வெள்ளியின் தோற்றத்தினாலும், சிறுசிறு பறவைகளின் ஓசையினாலும் வான்பரப்பு அழகு நிறைந்திருப்பதால் காலைப் பிறப்பின் அழகு கண்ணைக் கவர்கின்றது. அழகான சோலைகளின் கலகலப்பினாலும், சேவல் கூவும் அழகும் மனதை தட்டி எழுப்புகிறது. ஆசையை அழித்துவிட்டால் நம் வாழ்க்கை இனிமையாக இருக்கும். தாமரையின் மொட்டுகுள்ளே அழகு தங்கி கிடக்கிறது. அதிகாலையில் வீட்டைப் பெருக்கும் பெண்களின் முகத்தின் புன்னகைப் பொலிவையும், அழகையும் கண்டு நாடு விட்டு நாடு செல்லும் முழுமதியின் முகமும் வெட்கத்தினால் வெளுத்தது.

## 17. காவிரியின் பெருமை

**பக்கம் 83**

**அ) பிரித்து எழுதுக.**

1. வசை + இல் 2. வெண்மை + மீன் 3. உணவு + இன்

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. இகழ் 2. கருமை 3. உண்மை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. பட்டினப்பாலை – நூல் குறிப்பு எழுதுக.

சங்க கால தமிழ் நூல் தொகுப்பான பத்துப்பாட்டில் அடங்கிய ஒரு நூலே பட்டினப்பாலை ஆகும். பத்துப்பாட்டு வரிசையில் ஒன்பதாவது பாட்டு பட்டினப்பாலையாகும். இந்நூலை இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆவார். பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் பாலைத்திணையைப் பற்றிய பாடல் என்பதால் பட்டினப்பாலை என்னும் பெயர் பெற்றது. பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிக்கிறது. இந்நூலில் பண்டைய சோழ நாட்டின் சிறப்பு, தலைநகர் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு, செல்வ வளம், சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் பெருமைகள், மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பற்றி தெளிவாக கூறப்பட்டுள்ளது. இந்நூலில் மொத்தமாக 301 அடிகளால் ஆன பாடல்கள் அமைந்துள்ளன.

2. காவிரியின் பெருமை பற்றி இப்பாடல் கூறுவனவற்றை எழுதுக.

எவ்வித குற்றமும் இல்லாத, மிகுந்த புகழ்பெற்று விளங்கும் வெள்ளி என்னும் கோளானது, தனது திசையை மாற்றி, தான் நிற்க வேண்டிய இடமாகிய வடக்கு திசையில் நிற்காமல் தெற்கு திசைக்கு சென்றாலும், மழைத்துளியாகிய நீர் துளியை உணவாகக் கொண்ட வானம்பாடி வருந்துமாறு, மழை பெய்யாமல் அந்த வானம் பொய்த்தாலும், குடகு மலையில் தொடங்கி, கடலில் கலக்கும் காவிரி ஆறானது ஒருபோதும் பொய்க்காமல், தன்னுடைய நீரைத் தந்து பரந்து விரிந்துள்ள நிலத்திற்கு வளமையைச் சேர்க்கும்.

## 18. தமிழகத்தின் மலை வளம்

**பக்கங்கள் 88-89**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) குறிஞ்சி 2. ஈ) திருவண்ணாமலை

3. அ) சேர்வராயன் மலை 4. இ) சின்னக் கல்வராயன்

5. ஈ) ஓரி

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பீமன்
2. சேர மன்னர்கள்
3. கல்வராயன் மலை
4. விச்சிமலை
5. மூலிகைச் செடிகள்

**இ) பிரித்து எழுதுக.**

1. உயிர் + இனம்
2. இயற்கை + அழகு
3. மலை + தொடர்
4. வான் + ஆய்வகம்

**ஈ) சேர்த்து எழுதுக.**

1. நீரோடை
2. மலைப்பகுதி
3. பழங்காலம்
4. பரிசளித்தான்

**உ) பொருத்துக.**

1. ஆரணியாறு
2. வாணி ஆற்றுப் பள்ளத்தாக்கு
3. மேகம் அருவி
4. மங்களம் அருவி
5. ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி

**ஊ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. ஜவ்வாது மலையில் உருவாகும் ஆறுகளின் பெயர்களை எழுதுக.
   செய்யாறு, ஆரணியாறு, கமண்டல நாகநதியாறு, மிருகண்ட நதியாறு ஆகியன ஜவ்வாது மலையில் உருவாகும் ஆறுகள் ஆகும்.

2. சேர்வராயன் மலையில் விளைவிக்கப்படும் பயிர்கள் யாவை?
   சேர்வராயன் மலையில் பணப்பயிரான காப்பி பயிரும், பழவகைகளும் விளைவிக்கப்படுகின்றன.

3. கல்வராயன் மலையிலுள்ள அருவிகள் யாவை?
   கல்வராயன் மலையில் மேகம் அருவி, பண்ணியப்பாடி அருவி, பெரியார் நீர்வீழ்ச்சி, வெள்ளிமலை நீர்வீழ்ச்சி, மான்கொம்பு நீர்வீழ்ச்சி ஆகியவை அமைந்துள்ளன.

4. பச்சைமலை எத்தனை பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை யாவை?
   பச்சைமலையானது நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை தென்புற நாடு, வன்னாடு, கோம்பை நாடு மற்றும் ஆத்தி நாடு.

5. கொல்லிமலையைப் பற்றி பாடிய புலவர்களின் பெயர்களை எழுதுக.
   சங்க காலத்தில் வாழ்ந்த பரணர், ஔவையார், கல்லாடனார், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார், பெருஞ்சித்திரனார் போன்ற புலவர்கள் கொல்லிமலையைப் பற்றிய பல பாடல்களை இயற்றியுள்ளனர்.

## எ) பெருவினாக்களுக்கு விடையளி.

1. ஜவ்வாது மலை பற்றி குறிப்பு வரைக.

கிழக்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள ஓர் அழகிய மலைத்தொடரே ஜவ்வாது மலையாகும். இந்த மலைத்தொடரானது சுமார் 262 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இம்மலையைச் சுற்றி 200க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இதன் சராசரி உயரம் 1060–1160 மீட்டர் ஆகும். இங்குள்ள இயற்கை எழில் கொஞ்சும் நீரோடைகள், அருவிகள், செடிகள், கொடிகள், மரங்கள், பூக்கள், காடுகள் பார்ப்பவர் மனதை கொள்ளை கொள்ளும். ஜவ்வாது மலை, ஏலகிரி மலை என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மலையின் மேலே பீமன் அருவியும், வடக்குப் பகுதியில் அமிர்தி அருவியும், மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஏலகிரி மலையில் சலகாம்பாறை என்ற அருவியும் உள்ளது. செய்யாறு, ஆரணியாறு, கமண்டல நாகநதியாறு, மிருகண்ட நதியாறு ஆகியன இம்மலையிலிருந்து உற்பத்தியாகும் ஆறுகள் ஆகும். பழவகைகள், தினை, சாமை, வரகு, கடுக்காய் போன்றவை மலைவாழ் மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் ஆகும்.

2. சேர்வராயன் மலையைப் பற்றி எழுதுக.

சேர்வராயன் மலைத்தொடர் சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது கல்வராயன் மலைக்கு மேற்குப் பகுதியில் 400 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. வாணி ஆற்றுப் பள்ளத்தாக்கு இம்மலையை கிழக்கு மற்றும் மேற்கு என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறது. இது கடல் மட்டத்தை விட 4000–5000 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இந்த மலையில்தான் உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான ஏற்காடு அமைந்துள்ளது. இம்மலையின் நடுவே அமைந்துள்ள சேர்வராயன் கோவில் மிகவும் பிரசித்தி பெற்றது. இம்மலையை சேர மன்னர்கள் ஆண்டு வந்தனர் என்ற வரலாறும் உள்ளது. இங்கு பலவகையான அரிய மூலிகைச் செடிகளும், மரங்களும் உள்ளன. பணப்பயிரான காப்பி பயிரும், பழவகைகளும் விளைவிக்கப்படுகின்றன.

3. கல்வராயன் மலையின் இயற்கை அமைப்பினை விவரி.

தமிழ்நாட்டில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடரின் ஒரு பகுதியான கல்வராயன் மலை அமைந்துள்ளது. இம்மலை 1095 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது. இதன் உயரம் சுமார் 2000–3000 அடியாகும். இதன் வடக்குப் பகுதி "சின்னக் கல்வராயன்" எனவும், தெற்குப் பகுதி "பெரியக் கல்வராயன்" எனவும் அழைக்கப்படுகிறது. இம்மலைக்கு

ஏழைகளின் பிரதேசம் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. கல்வராயன் மலையில் ஓங்கி உயர்ந்த பசுமையான மரங்கள், பலவகையான பறவைகள், விலங்குகள், ஆர்ப்பரிக்கும் அருவிகள் என இயற்கை வளங்கள் மிகுந்து காணப்படுகின்றன.

4. பச்சைமலையிலுள்ள அருவிகள், ஆறுகள் மற்றும் அங்கு விளையும் பொருட்கள் முதலியவற்றை பட்டியலிடுக.

**அருவிகள்:** மங்களம் அருவி, கோரையாறு அருவி, மயிலூற்று அருவி.

**ஆறுகள்:** சின்னாறு, கல்லாறு, வெள்ளாறு, மருதையாறு.

**விளையும் பொருட்கள்:** பழவகைகள், நெல், முந்திரி, மரவள்ளிக்கிழங்கு.

5. கொல்லிமலையின் அமைவிடம், அங்குள்ள முக்கிய இடங்கள், விளையும் பொருட்கள் போன்றவற்றைப் பட்டியலிடுக.

**அமைவிடம்:** நாமக்கல் மாவட்டத்தில் சுமார் 280 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலும், கடல் மட்டத்திலிருந்து சுமார் 1200 மீட்டர் உயரத்திலும் அமைந்துள்ளது.

**முக்கிய இடங்கள்:** கொல்லிப்பாவை கோவில், வல்வில் ஓரியின் சிலை, அறப்பளிஸ்வரர் கோவில், முருகன் கோவில், வாசலூர் பட்டி படகுத் துறை.

**விளையும் பொருட்கள்:** மூலிகை செடிகள், கொய்யா, ஆரஞ்சு, மா, பலா, அன்னாசி, மிளகு, கிராம்பு, சோம்பு, சிறுதானியங்கள், மரவள்ளிக்கிழங்கு, ஏலக்காய்.

## 19. தொழிற்பெயர்

### பக்கங்கள் 91-92

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இ) தொழிற்பெயர் 2. அ) நட 3. ஈ) மை
4. அ) உழுதல் 5. அ) எதிர்மறை தொழிற்பெயர்

**ஆ) பொருத்துக.**

1. விகுதிபெற்ற தொழிற்பெயர்
2. முதனிலைத் தொழிற்பெயர்
3. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
4. எதிர்மறை தொழிற்பெயர்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. தொழிற்பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

   ஒரு வினையின் அல்லது செயலின் பெயர்களாக அமையும் பெயர்ச்சொல் தொழிற்பெயர் எனப்படும்.

   எ.கா. படித்தல், சிரித்தல்

2. தொழிற்பெயர் எவற்றைக் காட்டாது?

   தொழிற்பெயரானது திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றை குறிப்பாகவோ அல்லது வெளிப்படையாகவே காட்டாது.

3. விகுதி பெற்ற தொழிற்பெயரை விளக்குக.

   வினைச்சொல்லின் பகுதியானது தொழிற்பெயரின் விகுதியோடு சேர்ந்து வருவது விகுதி பெற்ற தொழிற்பெயர் எனப்படும். இவை பெரும்பாலும் அல், தல், அம், கை, வை ஐ, கு, பு, தி, சி, வி, மை போன்ற விகுதிகளைப் பெற்றுவரும்.

4. விகுதி பெற்ற தொழிற்பெயரின் விகுதிகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

   விகுதி பெற்ற தொழிற்பெயர் விகுதிகள்:

| | | | |
|---|---|---|---|
| அழுதல் | – 'தல்' விகுதி | நோக்கு | – 'கு' விகுதி |
| ஆளல் | – 'அல்' விகுதி | பிறப்பு | – 'பு' விகுதி |
| ஆட்டம் | – 'அம்' விகுதி | மறதி | – 'தி' விகுதி |
| செய்கை | – 'கை' விகுதி | குளிர்ச்சி | – 'சி' விகுதி |
| கோர்வை | – 'வை' விகுதி | கல்வி | – 'வி' விகுதி |
| அலை | – 'ஐ' விகுதி | அறியாமை | – 'மை' விகுதி |

5. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன?

   தொழிற்பெயரை பகுதி, விகுதி என இரண்டாகப் பிரிக்கலாம். இதில் பகுதியை "முதல்நிலை" என்று அழைப்பர். இவ்வாறு முதனிலையானது எவ்வித மாற்றமும் பெறாமல் தொழிற்பெயராக அமைவதே முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

6. சுவாமி விவேகானந்தர் தம் பேச்சால் புகழ் பெற்றார். இத்தொடரில் வந்துள்ள தொழிற்பெயரின் வகையை விளக்குக.

   சுவாமி விவேகானந்தர் தம் பேச்சால் புகழ் பெற்றார். இந்த வாக்கியத்தில் புகழ்தல் என்னும் தொழிற்பெயர், விகுதி பெறாமல் "புகழ்" என்னும் முதனிலையை மட்டும் பெற்று தொழிற்பெயருக்குரிய பொருளை உணர்த்துகிறது.

7. முதனிலைத் திரிந்த தொழிற்பெயரை விளக்குக.

தொழிற்பெயரானது விகுதியைப் பெறாமல், அதன் பகுதியாகிய முதனிலை மட்டும் திரிவதால் உருவாகும் தொழிற்பெயர் “முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்” எனப்படும்.

எ.கா. தமிழ் கற்கும் பேறு பெற்றேன்.

இத்தொடரில் பெறு என்ற பகுதியின் முதலெழுத்து நீண்டு பேறு எனத் திரிந்து தொழிற்பெயராக மாற்றம் பெற்றுள்ளது.

8. எதிர்மறை தொழிற்பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

ஒரு தொழிற்பெயரானது எதிர்மறைப் பொருளில் வருவதே எதிர்மறைத் தொழிற்பெயர் எனப்படும்.

எ.கா. பொய்யாமை, கல்லாமை, அஞ்சாமை

## 20. ஆற்றின் குமுறல்

**பக்கம் 97**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. சிறிய
2. அருகில்
3. புதுமை
4. ஓடாது
5. ஆரவாரம்

**ஆ) பிரித்து எழுதுக.**

1. பிறப்பு + இடம்
2. மாசு + அடைந்த
3. படிப்பு + அறிவு
4. தொழில் + சாலை
5. மனம் + கவலை

**இ) சேர்த்து எழுதுக.**

1. அறிவுரை
2. மலையுச்சி
3. வேரூன்றி
4. மதிப்பதில்லை
5. பசும்புல்

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஆலமரத்தின் குணம் யாது?

ஆலமரம் தன்னிடம் வந்து ஓய்வெடுக்கும் பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு எப்போதும் அறிவுரைகளை வழங்கிக்கொண்டே இருக்கும்.

2. ஆற்றின் மீது துர்நாற்றம் வீச காரணம் என்ன?

ஆற்றின் மீது மக்கள் கொட்டும் குப்பைகளே துர்நாற்றம் வீச காரணம் ஆகும்.

3. தன்னுள் கலக்கப்படும் பொருட்களாக ஆறு கூறியவை யாவை?

குப்பைகள், கொடிய நச்சுகள் நிறைந்த இரசாயனக் கழிவுகள்,

தொழிற்சாலைக் கழிவுகள், வேதிப் பொருட்கள், மக்காத நெகிழிகள் போன்றவை தன்னுள் கலக்கப்படும் பொருட்கள் என ஆறு கூறியது.

4. ஆறு இல்லையென்றால் என்ன நிகழும்?

   ஆறு இல்லையென்றால் விவசாயம் அழிந்துவிடும்; குடிக்க தண்ணீர் கிடைக்காது; மக்களும், மற்ற உயிரினங்களும் பஞ்சத்தில் அழிந்துபோக நேரிடும்.

5. “ஆற்றின் குமுறல்” கதையின் நீதியை எழுதுக.

   இந்த உலகில் எத்தகைய வலிமையுடையவராக இருந்தாலும் நீர் இல்லாத உலகில் வாழ முடியாது. நீர் இல்லையென்றால் பசும்புல்லின் நுனியைக் கூட காண முடியாது. இந்த உலகில் வசிக்கும் அனைத்து உயிரினங்களையும் பசி வருத்தும்; இந்த உலகமே அழிந்துவிடும். நாம் அனைவரும் நலமாக வாழத் துணை செய்வது நீர் ஒன்றே ஆகும். அத்தகைய நீரின் இருப்பிடமாகவும், அதன் ஊற்றாகவும் விளங்கும் ஆறுகளை பேணிப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

## 21. முயற்சி!

**பக்கம் 101**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பெரிய
2. நேராக
3. வேற்றுமை
4. முயற்சியின்மை
5. மெதுவாக

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. சிலந்தி வலை பின்னும் விதத்தை விவரி.

   சிலந்தி வளைந்து வளைந்து வட்ட வடிவில் வலையை பின்னும்.

2. ஒற்றுமையுடன் வீடு கட்டுவோர் யார்?

   ஒற்றுமையுடனும் திறமையுடனும் வீடு கட்டுவது தேனீக்கள்.

3. எறும்புகள் எவ்வாறு புற்றைக் கட்டும்?

   எறும்புகள் தங்களின் அருமையான முயற்சியால் அழகாக புற்றைக் கட்டும்.

4. குருவி கூடு கட்டும் விதம் பற்றிக் கவிஞர் கூறியுள்ளதை எழுதுக.

   குருவி தனது கூட்டை குடுக்கைப் போன்று பின்னி விரைவில் கட்டி முடிக்கும்.

5. பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.

   உலகியல் நூறு, எண்சுவை எண்பது, கழுதை அழுத கதை,

கனிச்சாறு, கொய்யாக் கனி, திருக்குறள் மெய்ப்பொருளுரை (பகுதி 1, 2, 3, 4), பாச்சோறு, பாவேந்தர் பாரதிதாசன், பள்ளிப் பறவைகள், பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள் (தொகுதி 1, 2) ஆகியன பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள் ஆகும்.

## 22. திருக்குறள்

**பக்கங்கள் 104-105**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மனத்திட்பம் 2. கடினம் 3. உருவம்
4. உறுதி 5. மனம் தளராமை

**ஆ) பிரித்து எழுதுக.**

1. வினை + திட்பம் 2. ஆறு + என்பர் 3. விழுமம் + தரும்
4. எண்ணி + ஆங்கு 5. உருவம் + கண்டு

**இ) சேர்த்து எழுதுக.**

1. மனத்திட்பம் 2. ஊரோரால் 3. ஊரெய்தி
4. வினைக்கண் 5. துணிவாற்றி

**ஈ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. முன் 2. வேண்டும் 3. கடின
4. பயம் 5. இன்பம்

**உ) வினாக்களுக்கு விடையளி.**

1. உறுதி என்பது யாது?

ஒரு செயலை இடையில் விடாது செய்து முடிப்பதற்கான உறுதி என்று சொல்லப்படுவது ஒருவனுடைய மனதின் உறுதியே ஆகும். மற்றவை எல்லாம் உறுதி எனப்படமாட்டா.

2. எளிது, கடினம் என வள்ளுவர் எதைக் கூறுகிறார்?

ஒரு செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எல்லோருக்கும் எளிது. சொல்லியபடியே அந்தச் செயலை செய்து முடிப்பதுதான் கடினம்.

3. “எண்ணிய எண்ணியாங்கு” எனத் தொடங்கும் குறளின் விளக்கத்தை தருக.

ஒரு செயலைச் செய்ய எண்ணியவர், எண்ணியபடியே செயல் ஆற்றுவதில் உறுதியுடையவராக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவார்.

4. யாரைக் கேலி செய்யக் கூடாது? ஏன்?
உருவத்தில் சிறியவர்களை கேலி செய்யக் கூடாது. அச்சாணி அளவில் சிறியது எனினும், பெரிய தேர் ஓடுவதற்கு அதுவே காரணமாகும். எனவே, உருவத்தால் சிறியவர்கள் என்பதற்காக யாரையும் கேலி செய்து அலட்சியப்படுத்தக் கூடாது.

5. எச்செயலைத் துணிவோடு நிறைவேற்றி முடிக்க வேண்டும்?
முடிவில் இன்பம் தரும் ஒரு செயலைச் செய்யும் போது மிகுந்த துன்பம் வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல், அச்செயலை துணிவுடன் நிறைவேற்றி முடிக்க வேண்டும்.

## 23. ஆபிரகாம் லிங்கன்

**பக்கங்கள் 110-111**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அ) கெண்டக்கி 2. இ) விக் 3. ஈ) சிகாகோ
4. அ) 1861 5. இ) ஏப்ரல் 9

**ஆ) பிரித்து எழுதுக.**

1. மக்கள் + ஆட்சி 2. தன் + நிகர் + அற்ற
3. அடிமை + தனம் 4. முற்று + புள்ளி
5. வழக்கு + அறிஞர்

**இ) சேர்த்து எழுதுக.**

1. சட்டமன்றம் 2. எதிர்ப்பின்றி 3. தேவையில்லை
4. ஐந்தாண்டுகள் 5. அறுத்தெறிந்து

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஆபிரகாம் லிங்கன் எங்கு, எப்போது பிறந்தார்?
ஆபிரகாம் லிங்கன் அவர்கள் அமெரிக்காவிலுள்ள கெண்டக்கி என்னும் மாநிலத்தில் 1809 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் நாள் பிறந்தார்.

2. ஆபிரகாம் லிங்கனின் பெற்றோர்களின் பெயரை எழுதுக.
தாமஸ் லிங்கன் மற்றும் நான்சி ஆகியோர் ஆபிரகாம் லிங்கனின் பெற்றோர்கள் ஆவர்.

3. லிங்கன் கல்வி பயின்ற விதம் பற்றி விவரி.
வறுமையின் காரணமாக ஆபிரகாம் லிங்கனால் பள்ளிக்கு சென்று படிக்க இயலவில்லை. எனவே, தனது தயாரான நான்சியிடமே கல்வி கற்றுக்கொண்டார். தன் தாயிடம் கற்றுக்கொண்டவற்றை

தரையிலும், சுவற்றிலும் கரித்துண்டுகள் மூலம் எழுதி எழுத்துப் பயிற்சிப் பெற்றார்.

4. லிங்கன் எவ்வாறு வழக்கறிஞரானார்?

ஒருமுறை தற்செயலாக நீதிமன்றத்திற்கு சென்ற லிங்கன், அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்கு விசாரணையை கூர்ந்துக் கவனித்தார். சட்ட ரீதியாக வழக்கறிஞராக வாதாடி அடிமைகளின் பிரச்சனைகளை தீர்க்க முடியும் என்பதை உணர்ந்தார். பின்னர் பழைய புத்தகங்களை விற்பனை செய்யும் கடைக்குச் சென்று சட்டப் புத்தகங்களை விலைக்கு வாங்கி ஓய்வு நேரங்களில் படிக்க ஆரம்பித்தார். சில ஆண்டுகள் கழித்து தனது சட்டக்கல்வியையும் முடித்து, பார் கவுன்சில் தேர்வில் வெற்றி பெற்று வழக்கறிஞரானார்.

5. அமெரிக்க உள்நாட்டுப் போருக்கான காரணம் யாது?

அமெரிக்க நாட்டின் தெற்குப் பகுதிகள் விவசாயத்தையே நம்பி இருந்ததால், பொருளாதார வளர்ச்சிக்கு அடிமைகளை வைத்து வேலை வாங்குவது அவசியமானது என கருதின. வடக்குப் பகுதிகளோ தொழிலியல் பகுதியாக இருந்ததால் அடிமைகள் தேவையில்லை என கருதின. இவ்வாறு தெற்கு, வடக்கு பகுதிகளுக்கிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளே உள்நாட்டுப் போருக்கான காரணமாகும்.

6. லிங்கன் எப்போது அமெரிக்க அதிபராகப் பதவியேற்றார்?

1861 ஆம் ஆண்டு மார்ச் 4 ஆம் நாள் அமெரிக்க நாட்டின் 16வது அதிபராக ஆபிரகாம் லிங்கன் பதவியேற்றுக் கொண்டார்.

7. அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவடைந்த விதம் பற்றி விவரி.

1864 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் மீண்டும் வெற்றிப் பெற்று இரண்டாவது முறையாக லிங்கன் பதவி ஏற்றார். 1865 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் நாள் தென் மாநில படைகள் அனைத்தும் சுற்றி வளைக்கப்பட்டன. தென் மாநில இராணுவப் படையின் தளபதி ராபர்ட் லீ அமெரிக்க இராணுவ தளபதியான ஜெனரல் கிரான்ட் முன்பு சரணடைந்தார். அடிமைத்தனத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டுமென்ற தீர்மானம் அமெரிக்க மக்களவையில் லிங்கன் தலைமையில் நிறைவேற்றப்பட்டது.

## 24. அணி இலக்கணம்

**பக்கங்கள் 113-114**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அழகு 2. மூன்று 3. சொல் பின்வருநிலையணி

4. மலர்ந்தன 5. சொற்பொருள் பின்வருநிலையணி

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. அணி என்றால் என்ன?

அணி என்றால் அழகு என்பது பொருள். புலவர்கள் தங்களின் கற்பனைத் திறத்தாலும், புலமையாலும் சொல்லிலும், பொருளிலும் அழகு சேர்க்க அணிகளைப் பயன்படுத்தி செய்யுள்களை இயற்றினார்கள்.

2. பின்வருநிலையணி என்றால் என்ன?

செய்யுளில் முன்னர் வந்த சொல், பொருள் அல்லது இவை இரண்டும் மீண்டும் பலமுறை பின்னரும் வருவதே பின்வருநிலையணி எனப்படும்.

3. பின்வருநிலையணி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பின்வருநிலையணி மூன்று வகைப்படும். அவை,

- சொல் பின்வருநிலையணி
- பொருள் பின்வருநிலையணி
- சொற்பொருள் பின்வருநிலையணி

4. "நாகமது, நாகமுற நாகமென நின்றான்" – இப்பாடல் வரியில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

**அணி:** "நாகமது நாகமுற நாகமென நின்றான்" என்ற பாடலில் சொல் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது.

**பாடல் விளக்கம்:** விந்திய மலையானது பாதாளத்தில் உள்ள நாகலோகத்தை அடையுமாறு அழுத்தி அதன் மேலே யானை போல் அகத்திய முனிவர் நின்றார்.

**பொருத்தம்:** இப்பாடலில் "நாகம்" என்ற சொல்லானது மலை, பாதாளம், யானை என வேறுபட்ட பொருட்களில் பலமுறை வந்துள்ளது. எனவே, இது சொல் பின்வருநிலையணி ஆகும்.

5. பொருள் பின்வருநிலையணி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

ஒரு செய்யுளில் ஒரே பொருளைத் தரக்கூடிய பல சொற்கள் மீண்டும் பலமுறை வருவது பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

எ.கா. அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை.

இப்பாடல் வரிகள் பலதரப்பட்ட மலர்கள் மலரும் நிகழ்வை

விளக்குகின்றன. இதில் அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன, விண்டன, விரிந்த என்ற சொற்கள் மலர்ந்தன என்னும் ஒரே பொருளை உணர்த்தி மீண்டும் வந்துள்ளன. எனவே, இது பொருள் பின்வருநிலையணி ஆகும்.

6. சொற்பொருள் பின்வருநிலையணியை சான்றுடன் விளக்குக.

ஒரு செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் பலமுறை வந்து, அதே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

எ.கா. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

**பொருள்:** ஒருவர் சொல்கின்ற சொற்கள் பயனுடைய சொற்களாகவே இருக்க வேண்டும். பயன் இல்லாத சொற்களை சொல்லக் கூடாது.

**பொருத்தம்:** இக்குறட்பாவில் சொல் என்ற சொல்லானது பலமுறை வந்து, "சொல்" என்ற ஒரே பொருளையே உணர்த்துகிறது. இவ்வாறு வந்த சொல்லே மீண்டும் வந்து, ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

## 25. யார் வல்லவர்?

**பக்கம் 118**

### அ) பிரித்து எழுதுக.

1. மனம் + மகிழ்ச்சி
2. வலிமை + உடையவன்
3. கலைந்து + ஓடின
4. உடைத்து + எடுத்து
5. அருகில் + இருந்த

### ஆ) வினாக்களுக்கு விடையளி.

1. சிற்பியின் திறமை யாது?

மனதில் தோன்றும் உருவங்களை எல்லாம் அற்புதமான சிலைகளாக வடிப்பதே சிற்பியின் திறமை ஆகும்.

2. சிற்பி தேவதையிடம் என்ன வரம் கேட்டார்?

இந்த உலகிலேயே மிகுந்த வலிமையுடையவனாக இருக்க வேண்டும் என்ற வரத்தையே சிற்பி தேவதையிடம் கேட்டார்.

3. மேகக்கூட்டங்கள்தான் வலிமையானவை என்று சிற்பி நினைக்க காரணம் யாது?

கருமேகக் கூட்டங்கள் சூரியனின் கதிர்களை மறைத்தன. சூரியனாக மாறிய சிற்பியால் அம்மேகங்களைத் தாண்டி தனது கதிர்களை செலுத்த முடியவில்லை. எனவே, சூரியனின் கதிர்களையே

மறைக்கும் கருமேகக் கூட்டங்கள்தான் வலிமையானவை என சிற்பி நினைத்தார்.

4. காற்றாக மாறிய சிற்பி என்ன செய்தார்?
   காற்றாக மாறிய சிற்பி முதலில், தென்றல் வடிவில் அனைவரையும் குளிர வைத்து மகிழ்ச்சியடைந்தார். பின்னர் புயலாகமாறி உலகையே கலங்கடித்தார். இவரின் வேகத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் மேகக்கூட்டங்கள் கலைந்தோடின.

5. சுய உருவை அடைந்ததும் சிற்பி உணர்ந்து கொண்ட உண்மையை எழுதுக.
   ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவமான வலிமை உள்ளது. எனவே, மற்றவரைப் போல் இருக்க ஆசைப்படாமல், ஒவ்வொருவரும் தங்களின் வலிமைகளை பெருக்கிக் கொண்டு, இந்த உலகத்தோடு ஒத்து வாழ வேண்டும் என்ற உண்மையை சிற்பி உணர்ந்து கொண்டார்.

## 26. பெண்கல்வி

**பக்கங்கள் 121-122**

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கல்வி
2. களர்நிலம்
3. வானூர்தி
4. வளமிக்க நிலம்
5. உலகம்

### ஆ) பிரித்து எழுதுக.

1. களர் + நிலம்
2. கல்வி + இல்லாத
3. நன்மை + அறிவு
4. வான் + ஊர்தி
5. மலர் + கை

### இ) வினாக்களுக்கு விடையளி.

1. பெண்களுக்கு ஏன் கல்வி வேண்டுமென பாரதிதாசன் கூறுகிறார்?
   திறம்பட குடும்பம் நடத்துவதற்கு பெண்களுக்கு கல்வி வேண்டும். குழந்தைகளை நல்வழியில் வளர்த்திட பெண்களுக்கு கல்வி வேண்டும். இந்த அரிய உலகினைக் காத்திட பெண்களுக்குக் கல்வி வேண்டும். கல்வியைக் காப்பாற்றி பேணிடவும் பெண்களுக்கு கல்வி அவசியமாகும்.

2. கல்வியறிவு இல்லாத பெண்கள் எத்தகையவர்கள்?
   கல்வி அறிவு இல்லாத பெண்கள் பண்படாத களர்நிலம் போன்றவர்கள். அந்நிலத்தில் புல் தான் விளையுமே தவிர, நல்ல பயிர்கள் விளையாது. அதுபோலவே கல்வி இல்லையெனில் நல்ல அறிவுடைய மக்கள் உருவாக மாட்டார்கள்.

3. கல்வியறிவுடைய பெண்களைப் பற்றி பாரதிதாசன் கூறுவது யாது?

கல்வி பயின்ற பெண்கள் பண்பட்ட, வளமிக்க நன்செய் நிலத்தைப் போன்றவர்கள். அவர்களால்தான் சிறந்த அறிவுடைய மக்களை உருவாக்க முடியும் என பாரதிதாசன் கூறுகிறார்.

4. இருபாலருக்கும் பொதுவானவை எது?

வானூர்திகளைச் செலுத்துவது, இவ்வுலகையும் கடலையும் அளப்பது போன்ற அனைத்து செயல்களும் ஆண், பெண் என இருபாலருக்கும் பொதுவானதாகும்.

## 27. திருக்குறள்

**பக்கம் 125**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஒப்பு 2. பகைவர்களிடம் 3. உலகத்தார்
4. உலகம் 5. மரத்தைப்

**ஆ) பிரித்து எழுதுக.**

1. எளிது + என்ப 2. பண்பு + உடைமை 3. குடி + பிறத்தல்
4. மக்கள் + ஒப்பு 5. பட்டு + உண்டு

**இ) சேர்த்து எழுதுக.**

1. அன்புடைமை 2. பண்பொத்தல் 3. நயனொடு
4. பயனுடையார் 5. மக்கட்பண்பு

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. பண்புடையவராக வாழத் தேவையான இரண்டு நல்வழிகள் யாது?

அன்புடையவராக இருப்பதும், உயர்ந்த குடியில் பிறந்த இலக்கணத்துக்கு உரியவராக இருப்பதும் ஆகிய இவ்விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும்.

2. யாருடைய நல்லப் பண்பினை உலகத்தார் சிறப்பித்துப் பேசுவர்?

நீதியையும் நன்மையையும் விரும்பி, பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்லப் பண்பை உலகத்தார் சிறப்பித்துப் பேசுவர்.

3. மக்களுக்குரிய பண்பில்லாதவர் எத்தகையவர்?

மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், அரம் போன்ற கூர்மையான அறிவுடையவரானாலும், ஓர் அறிவு படைத்த மரத்தைப் போன்றவரே ஆவார்.

4. எது இழிவான செயல்?
நட்பு கொள்ள முடியாதவராய்த் தீயவைச் செய்கின்றவரிடத்திலும், பொறுமையுடன் பண்புடையவராக நடந்து கொள்ளாவிட்டால் அது இழிவான செயலாகும்.

5. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் எத்தகையது?
நல்ல பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம், வைத்த பாத்திரத்தின் தீமையால் நல்ல பால் தன் சுவை கெடுவது போன்றதாகும்.

## 28. ஜான்சி ராணி லட்சுமி பாய்

**பக்கம் 129**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) மணிகர்ணிகா
2. அ) 60,000
3. ஈ) ஹக் ரோஸ்
4. இ) நேதாஜி
5. ஆ) ஜூன் 18

**ஆ) பிரித்து எழுதுக.**

1. படை + தளபதி
2. உடல் + நிலை
3. வழக்கு + அறிஞர்
4. மதிப்பு + அற்ற
5. ஓய்வு + ஊதியம்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. ராணி லட்சுமி பாய் எங்கு, எப்போது பிறந்தார்?
ராணி லட்சுமிபாய் உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள காசியில் 1828 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் நாள் பிறந்தார்.

2. லட்சுமி பாயின் இயற்பெயர் என்ன?
லட்சுமி பாயின் இயற்பெயர் மணிகர்ணிகா.

3. ஆங்கிலேயர்கள் எவ்வாறு லட்சுமி பாயை ஜான்சி கோட்டையிலிருந்து வெளியேற்றினார்கள்?
ஆங்கிலேய அதிகாரிகள், லட்சுமி பாய் அவர்களின் அரண்மனைக்குள் புகுந்து விலைமதிப்பற்ற பொன்னையும், பொருளையும் பறிமுதல் செய்தனர். 1854 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ராணி லட்சுமி பாய்க்கு 60,000 ரூபாயை ஓய்வூதியமாகக் கொடுத்து ஜான்சிக் கோட்டையை விட்டு வெளியேற்றினார்கள்.

4. இந்தியக் கிளர்ச்சி ஏற்படக் காரணம் யாது?
1857 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதி மீரட்டில் போர் வீரர்களுக்கு புதிதாக வழங்கப்பட்ட துப்பாக்கிக் குண்டுகளில் பசு மற்றும் பன்றியின் கொழுப்புப் பூசப்பட்டதாகப் பரவிய செய்தியை அடுத்து இந்தியக் கிளர்ச்சி ஏற்பட்டுப் பரவத் தொடங்கியது.

5. ஜான்சி ராணி லட்சுமி பாய் எப்போது, எப்படி இறந்தார்?

1858 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் தேதி கோட்டாகி சேராய் என்ற இடத்தில் வெள்ளையரை எதிர்த்து ஆண் வேடம் தரித்து ஜான்சி ராணி போரிட்டார். ஆனால், பெரிய ஆயுதப்படையுடன் இருந்த ஆங்கிலேயர்களுக்கு எதிராக அவரால் வெற்றி பெற முடியவில்லை. எதிரிகளின் படை மூலம் தாக்கப்பட்டு 1858 ஆம் ஆண்டு ஜூன் 18 ஆம் தேதி வீரமரணம் அடைந்தார்.

## 29. அணி இலக்கணம்

**பக்கங்கள் 133-134**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நான்கு 2. உவமானம் 3. எடுத்துக்காட்டு உவமையணி
4. உருவகம் 5. பகுதி

**ஆ) பின்வரும் உவமைகளை உருவகங்களாக மாற்றுக.**

1. நிலாப்பால் 2. விழிக்கயல் 3. கைமலர்
4. வாய்ப்பவளம் 5. முகத்தாமரை

**இ) பின்வருவனவற்றை உவமை, உருவகம் என அட்டவணைப்படுத்துக.**

| உவமை | உருவகம் |
|---|---|
| தமிழ்த்தேன் | விழிவேல் |
| தமிழன்னை | கனிவாய் |
| கண்மலர் | அடிமலர் |
| முத்துப்பல் | பொற்புலம் |
| தேன் உவகை | தாய்மொழி |

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. உவமை அணி என்றால் என்ன?

ஒரு செய்யுளில் உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும், உவம உருபு வெளிப்படையாகவும் வந்து, பொதுத்தன்மையை உணர்த்துவதே உவமை அணி எனப்படும்.

2. உவமை அணியின் உறுப்புகள் யாவை?

- உவமானம் அல்லது உவமை
- உவமேயம் அல்லது பொருள்
- உவம உருபுகள்
- பொதுத்தன்மை அல்லது ஒத்த பண்பு

3. உவம உருபுகளை எழுதுக.

அன்ன, ஆங்க, இறப்ப, உறழ, எள்ள, என்ன, ஏய்ப்ப, ஒட்ட, ஒடுங்க, ஒப்ப, ஒன்ற, ஓட, கடுப்ப, கள்ள, காய்ப்ப, தகைய, நடுங்க, நந்த, நளிய, நாட, நிகர்ப்ப, நேர, நோக்க, புரைய, புல்ல, பொருவ, பொற்ப, போல, மதிப்ப, மருள, மறுப்ப, மாற்ற, மான, வியப்ப, விளைய, வீழ, வெல்ல, வென்ற ஆகியன உவம உருபுகளாகும்.

4. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. – இக்குறட்பாவின் அணி விளக்கம் தருக.

**குறள் விளக்கம்:** பொதுநல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின் செல்வமானது, ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்று பொதுவானதாகும்.

**பொருத்தம்:**
- உவமை : ஊருணி நீர்நிறைதல்
- உவமேயம் : பேரறிவாளன் திரு
- உவம உருபு : அற்று

உவமை, உவமேயம் இவ்விரண்டனையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படுமாறு அமைந்துள்ளதால் மேற்கண்ட குறட்பாவில் உவமை அணி பயின்று வந்துள்ளது.

5. உவமை அணிக்கும், எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் இடையேயுள்ள வேறுபாடு யாது?

உவம உருபு வெளிப்படையாக வந்து பொதுத்தன்மையை உணர்த்துவது உவமை அணி ஆகும். உவம உருபு மறைந்து வந்து பொதுத்தன்மையை உணர்த்துவது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

6. எடுத்துக்காட்டு உவமை அணியை சான்றுடன் விளக்குக.

உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் வந்து உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

எ.கா. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

**குறள் விளக்கம்:** வெளிப்புறத் தூய்மை என்பது நீரினால் உண்டாகும். அதைப் போலவே மனத்தூய்மை என்பது உண்மை பேசுவதால் மட்டுமே உண்டாகும்.

**பொருத்தம்:** உவமானம் : புறந்தூய்மை நீரான் அமையும்
உவமேயம் : அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்
உவம உருபு : போல

இக்குறட்பாவில் உவமானம், உவமேயம் இரண்டும் கொடுக்கப்பட்டு, அதற்கிடையில் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

7. இல்பொருள் உவமையணி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

உலகில் இல்லாத ஒரு பொருளையோ அல்லது இயல்பாக நடக்காத ஒரு நிகழ்வையோ உவமையாகக் கூறுவது இல்பொருள் உவமையணி எனப்படும்.

எ.கா. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

**குறள் விளக்கம்:** மனத்தில் அன்பு இல்லாமல் வாழும் வாழ்க்கை என்பது எவ்வித வளமும் இல்லாத பாலைவனத்தில் உள்ள பட்டமரம் தளிர்த்தது போன்றது.

**பொருத்தம்:** உவமானம் : அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை
உவமேயம் : வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த் தற்று
உவம உருபு : போன்ற

பாலைவனத்திலுள்ள பட்டுப்போன மரங்கள் தளிர்ப்பது என்பது உலகில் நடைபெறாத நிகழ்வாகும். அந்தச் செயலானது அன்பில்லாமல் வாழும் மக்களின் வாழ்க்கைக்கு உவமையாக காட்டப்பட்டுள்ளது.

8. உருவக அணி என்பது யாது? சான்று தருக.

உவமை மற்றும் உவமேயம் என்ற இவை இரண்டும் எவ்வித வேறுபாடுகள் இல்லாமல், இரண்டும் ஒன்றே என்று தோன்றும்படி உவமையின் தன்மையை உவமேயத்தில் ஏற்றிக் கூறுவது உருவக அணியாகும்.

எ.கா. 'மதிமுகம்' என்று கூறுவது உவமை ஆகும். முகம் தான் மதி என்னும் பொருளில் 'முகமதி' என்று கூறுவது உருவகம் ஆகும்.

9. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். – அணி விளக்கம் தருக.

**குறள் விளக்கம்:** ஒருவரின் பெருமையையும் சிறுமையையும் ஆராய்ந்து அறிவதற்கான உரைக் கல்லாக இருப்பவை அவர்களுடைய செயல்களே ஆகும்.

**பொருத்தம்:** இக்குறட்பாவில் ஏகதேச உருவக அணி பயின்று வந்துள்ளது. "கருமம்" என்பது உரைக் கல்லாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், ஒருவர் செய்யும் செயலினால் அவருக்கு கிடைக்கும் பெருமையும் சிறுமையும் பொன்னாக உருவகம் செய்யப்படவில்லை. இவ்வாறு ஒன்றனை மட்டும் உருவகப்படுத்தி விட்டு, அதனோடு தொடர்புடைய மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விட்டு விடுவதே ஏகதேச உருவக அணி ஆகும்.

10. உருவக அணிக்கும், ஏகதேச உருவக அணிக்கும் இடையேயுள்ள வேறுபாடு யாது?

உவமையின் தன்மையை உவமேயத்தில் ஏற்றிக் கூறுவது உருவக அணியாகும். ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி விட்டு, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விட்டு விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

## 30. உதவி செய்வோம்

**பக்கம் 139**

**அ) பிரித்து எழுதுக.**

1. வகுப்பு + ஆசிரியர்
2. அங்கு + இருந்த
3. மருந்து + அகம்
4. ஒய்வு + எடு
5. வழி + அனுப்பி

**ஆ) சேர்த்து எழுதுக.**

1. வகுப்பறை
2. நேரங்கழித்து
3. கோபமடைந்தார்
4. காவல்துறை
5. பெருந்தன்மை

**இ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பிடிக்காத
2. தவறான
3. எழுந்தார்
4. முடியும்
5. மெதுவாக

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. மலர்விழி யார்? அவளுக்கு பிடித்த செயல் யாது?

மலர்விழி ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவி. பிறருக்கு உதவி செய்வது அவளுக்கு மிகவும் பிடித்த செயல் ஆகும்.

2. முதியவர் மயங்கி விழக் காரணம் யாது?

அந்த முதியவருக்கு உடல்நிலை சரியில்லை, மருத்துவர் எழுதிக் கொடுத்த மருந்துகள் தீர்ந்து விட்டதால், அவற்றை வாங்குவதற்கு வந்த போது மயங்கி கீழே விழுந்து விட்டார்.

3. மலர்விழி முதியவருக்கு எவ்வாறு உதவி செய்தாள்?

முதியவருக்கு தண்ணீர் கொடுத்து சாலையின் ஓரமாக இருந்த மரத்தடியில் அமர வைத்தாள். பின்னர் அவரின் மருந்துச் சீட்டினை எடுத்து சென்று மருந்துகளை வாங்கி வந்தாள்.

4. மலர்விழிக்கு வகுப்பாசிரியர் அளித்த தண்டனை என்ன?

மலர்விழி நேரம் கடந்து வகுப்பிற்கு வந்ததைக் கண்டு கோபமடைந்த வகுப்பாசிரியர், அந்த வகுப்பு முடியும் வரை வகுப்பிற்கு வெளியே நிற்க வேண்டும் என்ற தண்டனையை அளித்தார்.

5. ‘‘உதவி செய்வோம்’’ கதையின் நீதி யாது?

ஒருவருக்கு உதவி செய்வது போன்ற சிறந்த செயல் உலகில் வேறொன்றும் கிடையாது. நமக்கு நெருக்கடியான நேரத்தில் ஒருவர் செய்யும் உதவி சிறிதாக இருந்தாலும், அவர் உதவிய நேரத்தின் அடிப்படையில் பார்த்தால் அது இந்த உலகைவிட மிகப் பெரியதாகும். எனவே, சிறு வயது முதலே பிறருக்கு உதவும் மனப்பான்மையை அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## 31. தேர் கொடுத்தவர்

**பக்கம் 142**

**அ) பிரித்து எழுதுக.**

1. யார் + அடி  2. கீழ் + இறங்கி  3. மகிழ்ச்சி + ஓடு
4. கொம்பு + இல்லாமல்  5. மிடுக்கு + உடனே

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. கொழுத்த  2. இகழ்  3. உண்டு
4. செல்  5. தொலைவில்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. தேரின் அமைப்பை பற்றி எழுதுக.

விலையுயர்ந்த முத்துகள், பவளங்கள், மணிகள் போன்றவற்றைக் கொண்டு இழைக்கப்பட்ட அழகான தேரே வள்ளல் பாரியின் தேராகும்.

2. தேரில் வந்தவர் யார்? அவரின் சிறப்புகள் என்ன?

எல்லா திசைகளிலும் புகழ்பெற்று விளங்கியவர் வள்ளல் பாரி ஆவார். அவர் யாரிடமும் இல்லை என்று கூறாமல் வாரி வழங்கும் கொடைத்தன்மை கொண்டவர்.

3. தேர் சாலையோரம் நின்றதற்கான காரணம் யாது?

மாலைக் காற்றில் அசைந்து ஆடிக் கொண்டிருந்த முல்லைக் கொடியை கண்டதும் வள்ளல் பாரி தனது தேரை சாலையின் ஓரமாக நிறுத்தினார்.

4. முல்லைக் கொடியைப் பார்த்த மன்னர் என்ன செய்தார்?

தேரை விட்டுக் கீழே இறங்கிய வள்ளல் பாரி, பற்றிப் படரக் கொம்பில்லாமல் காற்றில் சுழன்று சுழன்று தவித்துக் கொண்டிருந்த முல்லைக் கொடியை கண்டு மனம் வாடி நொந்துப் போனார். பிறகு தனது தேரை அந்தக் கொடியின் அருகே நிறுத்தினார். முல்லைக்

கொடியை தனது கைகளில் எடுத்து அந்தத் தேரின் மீது படர விட்டார். அதன் பின்னர் வள்ளல் பாரி மனமகிழ்ச்சியோடு நடந்து சென்றார்.

## 32. திருக்குறள்

**பக்கம் 145**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஊக்கமிகுதி
2. பிறப்பால்
3. பணிந்து
4. சிறுமை
5. இழிவு

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. இறப்பு
2. கீழ்
3. பன்மை
4. சிறுமை
5. சிறியார்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. பெருமை எவ்வாறு வருமென வள்ளுவர் கூறுகின்றார்?

   பிறப்பால் எல்லா மக்களும் சமமானவர்களே ஆவர். அவரவர் செய்யும் செயல் வேறுபாடுகளால் மட்டுமே பெருமை வரும்.

2. பெருமைப் பண்பு உடையோர் யார்?

   செய்வதற்கு அரியச் செயல்களை, செய்வதற்கு உரிய நெறியில் செய்து முடிக்க வல்லவரே பெருமைப் பண்பு உடையவர் ஆவர்.

3. எக்காலத்திலும் பணிந்து நடப்பவர் யார்? தன்னைத் தானே வியந்து பாராட்டிக் கொள்பவர் யார்?

   பெருமைப் பண்பு உடையவர் எக்காலத்திலும் பணிந்து நடப்பர். ஆனால், சிறுமைப் பண்பு உடையவரோ செருக்குடன் தன்னைத் தானே வியந்துப் பாராட்டிக் கொள்வர்.

4. எது பெருமை? எது சிறுமை?

   பெருமைப்பட்டுக் கொள்ளக் காரணங்கள் இருந்தும் செருக்கு இல்லாமல் இருப்பது பெருமை. காரணம் இல்லாமலேயே பெருமைப்பட்டுக் கொள்வது சிறுமை.

5. “அற்றம் மறைக்கும் பெருமை” – குறள் விளக்கம் தருக.

   பெருமைக்குரியவர் பிறர் பெருமைகளைச் சொல்லி அவர் குறைகளைக் கூறாமல் மறைத்து விடுவர். ஆனால், சிறுமைக்கு உரியவர்களோ பிறர் பெருமைகளை மறைத்துக் குறைகளை மட்டுமே கூறிவிடுவர்.

# 33. கப்பலோட்டிய தமிழன்

## பக்கம் 151

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம்பிள்ளை 2. 1872
3. சுதேசி நாவாய்ச் சங்கம் 4. எஸ்.எஸ். காலியோ
5. செப்டம்பர் 5

**ஆ) பிரித்து எழுதுக.**

1. செக்கு + இழுத்த 2. மக்கள் + இடையே 3. உரிமை + இயல்
4. கை + ஊட்டு 5. மெய் + அறம்

**இ) சேர்த்து எழுதுக.**

1. தீவிரமடைந்தது 2. நீதிமன்றம் 3. பெருங்குணம்
4. வழக்கறிஞர் 5. மெய்யறிவு

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. கப்பலோட்டிய தமிழரின் பிறப்பு பற்றி எழுதுக.

   தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் உலகநாத பிள்ளை மற்றும் பரமாயி அம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாக வ. உ. சிதம்பரம்பிள்ளை பிறந்தார்.

2. சிதம்பரனார் கப்பல் நிறுவனத்தை தொடங்கியதற்கான காரணம் யாது?

   ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டின் வளங்களை கொள்ளை அடிப்பதைக் கண்ட சிதம்பரனார் அவர்களை கடுமையாக எதிர்த்தார். “பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி” என்ற கப்பல் நிறுவனம் இந்தியா, இலங்கை இடையே கப்பல்களை இயக்கிக் கொண்டு இருந்தது. அது ஆங்கிலேயரின் வணிகத்துக்கே முக்கியத்துவம் கொடுத்தது. ஆதலால் இந்தியர்களுக்காக ஒரு கப்பல் நிறுவனத்தை தொடங்க வேண்டுமென சிதம்பரனார் தீர்மானித்தார். அதன்படி 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் “சுதேசி நாவாய்ச் சங்கம்” என்ற கப்பல் நிறுவனத்தையும் பதிவு செய்தார்.

3. இந்திய விடுதலைப் போராட்டத்தில் சிதம்பரனாரின் பங்கைப் பற்றி எழுதுக.

   தூத்துக்குடியில் இருந்த கோரல் நூற்பாலையில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு ஊதியமாக குறைவான கூலியே கொடுக்கப்பட்டது. ஆனால், தொழிலாளர்கள் விடுமுறை இன்றி,

தினமும் பன்னிரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக உழைக்க வேண்டும். இதைக் கண்ட வ.உ.சி.யும், சுப்ரமணிய சிவாவும் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டினார்கள். 1908 ஆம் ஆண்டு பிப்ரவரி 23 ஆம் நாள் வ.உ.சி. தூத்துக்குடியில் சொற்பொழிவு ஆற்றினார். பிப்ரவரி 27 ஆம் நாள் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்கள் கூலி உயர்வு, வாரத்தில் ஒரு நாள் விடுமுறை, மேலும் மற்ற விடுமுறை நாட்கள் தொடர்பான கோரிக்கைகளை அவர்கள் முன் வைத்தனர். பொதுமக்களும் அந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளித்ததால் வேலை நிறுத்தம் தீவிரமடைந்தது. இறுதியில் நூற்பாலை நிர்வாகம் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள சம்மதித்தது. சுதேசி கப்பல் நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் நூற்பாலை வேலை நிறுத்தத்தின் வெற்றி ஆங்கிலேயர்களை அச்சுறுத்தியது. இந்தியாவில் நிலைத்திருக்க வேண்டுமென்றால் வ.உ.சி.யைக் கைது செய்வது அவசியம் என்று எண்ணினர். அதனால் வ.உ.சி.யும், சுப்ரமணிய சிவாவும் 1908 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் நாள் கைது செய்யப்பட்டனர்.

4. ‘‘சிதம்பரம்பிள்ளையின் பெருங்குணம்’’ என பாராட்டியது எது? ஏன்?

‘‘சிதம்பரம் பிள்ளையின் பெருங்குணம்’’ என்று பாராட்டியது அன்றைய ஒரே தேசிய இதழான ‘‘சுதேசமித்திரன்’’. சிறையில் இருந்த வ.உ.சி. கடுமையான வேலைகளை செய்தார். சணல் நூற்றார்; கல் உடைத்தார்; மாடுகள் இழுக்கும் செக்கினை இழுத்தார். சிதம்பரனாருக்கு மட்டும் ஜாமீன் தர தூத்துக்குடி வியாபாரிகள் சங்கத்தினர் முன்வந்தனர். ‘‘சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகிய இருவருக்கும் ஜாமீன் கொடுத்தால்தான் நான் வெளியே வருவேன்’’ என்று சிதம்பரனார் தனக்கு அளிக்கப்பட்ட ஜாமீனை மறுத்தார். இதுவே ‘‘சிதம்பரம் பிள்ளையின் பெருங்குணம்’’ என பாராட்டப்பட்டது.

5. வ.உ. சிதம்பரனாருக்கு இந்திய அரசு செய்த மரியாதைகளை பட்டியலிடுக.

வ.உ.சி.யின் நூற்றாண்டு விழாவின் போது, நம் முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியால் 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் அன்று வ.உ.சி.யின் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. கோயம்புத்தூர் மத்திய சிறையில் வ.உ.சி. இழுத்த செக்கு சென்னை காந்தி நினைவு மண்டபத்தில் நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்படுகிறது. தூத்துக்குடி துறைமுகம் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

## 34. யாப்பு இலக்கணம்

**பக்கங்கள் 157-158**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கட்டுதல்
2. ஆறு
3. நேரசை
4. நான்கு
5. ஆசிரியப்பா

**ஆ) பொருத்துக.**

1. செப்பல் ஓசை
2. அகவல் ஓசை
3. துள்ளல் ஓசை
4. தூங்கல் ஓசை

**இ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. யாப்பு இலக்கணம் என்றால் என்ன?

   யாப்பு என்றால் "கட்டுதல்" என்று பொருள்படும். புலவர்களால் யாக்கப்பட்ட செய்யுள்களின் அமைப்பையும், செய்யுள்கள் இயற்றுவதற்குரிய இலக்கணத்தையும் பற்றி தெளிவாக எடுத்துரைப்பதே யாப்பிலக்கணம் ஆகும்.

2. யாப்பின் வேறு பெயர்கள் யாவை?

   செய்யுள், பாட்டு, தூக்கு, பா, கவிதை என்பன யாப்பின் வேறு பெயர்கள் ஆகும்.

3. யாப்பின் உறுப்புகளை எழுதுக.

   எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற ஆறும் யாப்பின் உறுப்புகள் ஆகும்.

4. சீர் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

   ஓர் அசையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ இணைந்து வருவது சீர் எனப்படும். ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என சீர் நான்கு வகைப்படும்.

5. பா என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.

   பா என்றால் பாடல் என்பது பொருள். பா நான்கு வகைப்படும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன பாவின் வகைகள் ஆகும்.

**ஈ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. அசை என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

   எழுத்துகள் தனித்தோ அல்லது சேர்ந்தோ அமைவது அசை எனப்படும். இது நேரசை, நிரையசை என இரண்டு வகைப்படும்.

   - **நேரசை:** குறில் அல்லது நெடில் எழுத்து ஒற்றுடன் சேர்ந்தோ அல்லது சேராமலோ வருவது நேரசை ஆகும்.

எ.கா. க – குறில் தனித்து வந்த நேரசை
கல் – குறில் ஒற்றெழுத்துடன் வந்த நேரசை
கா – நெடில் தனித்து வந்த நேரசை
கால் – நெடில் ஒற்றெழுத்துடன் வந்த நேரசை

- **நிரையசை:** இரண்டு குறில் எழுத்துகள், குறில் மற்றும் நெடில் இரண்டும் இணைந்து, ஒற்றுடன் சேர்ந்தோ அல்லது சேராமலோ வருவது நிரையசை ஆகும்.

  எ.கா. கனி – இரண்டு குறில்கள் இணைந்து வருவது
  மயில் – இரண்டு குறில்கள் ஒற்றுடன் இணைந்து வருவது
  புறா – குறிலும், நெடிலும் இணைந்து வருவது
  கடாம் – குறிலும், நெடிலும் ஒற்றுடன் இணைந்து வருவது

2. தளை என்பது யாது? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?

   இரண்டு சீர்கள் ஒன்றோடு ஒன்று இணையும் விதம் தளை எனப்படும். தளை என்பதற்கு கட்டு என்பது பொருள் ஆகும். ஒரு செய்யுளில் முதல் சீரின் இறுதி அசையும், வரும் சீரின் முதல் அசையும் எவ்வகை அசை என்பதன் அடிப்படையில் தளை ஏழு வகைப்படும். அவை நேரொன்றாசிரியத் தளை, நிரையொன்றாசிரியத் தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித் தளை மற்றும் ஒன்றாத வஞ்சித் தளை.

3. தொடை என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.

   தொடை என்பதற்கு தொடுக்கப்படுவது என்பது பொருள். மலர்களைத் தொடுத்து அழகிய மாலை செய்வது போல, செய்யுளில் ஓசை நயமும், பொருள் நயமும் அமைந்திடும் வகையில் சீர்களை தொடுப்பதே தொடை எனப்படும். மோனைத் தொடை, எதுகைத் தொடை, முரண் தொடை, இயைபுத் தொடை, அளபெடைத் தொடை, இரட்டைத் தொடை, அந்தாதித் தொடை, செந்தொடை ஆகியன தொடையின் வகைகள் ஆகும்.

4. வெண்பா, ஆசிரியப்பா பற்றி குறிப்பு வரைக.

   **வெண்பா:** கடைசி அடி மூன்று சீர்களாகவும், ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் வரும். அற நூல்கள் பலவும் வெண்பாவால் அமைந்தவை ஆகும். இது செப்பல் ஓசையை உடையது.

   - குறள் வெண்பா
   - சிந்தியல் வெண்பா
   - நேரிசை வெண்பா
   - இன்னிசை வெண்பா
   - பஃறொடை வெண்பா

   **ஆசிரியப்பா:** அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வரும். தமிழ் சங்க இலக்கியங்கள் பலவும் ஆசிரியப்பாவால் அமைந்தவை ஆகும்.

இது அகவல் ஓசையை உடையது. ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.

- நேரிசை ஆசிரியப்பா
- நிலை மண்டில ஆசிரியப்பா
- இணைக்குறள் ஆசிரியப்பா
- அடிமறி மண்டில ஆசிரியப்பா

5. கலிப்பா, வஞ்சிப்பாவை விளக்குக

**கலிப்பா:** நான்கு சீர்களைக் கொண்ட அளவடியைப் பெற்று வருவது கலிப்பா ஆகும். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை கலிப்பாவினால் ஆனது. இது துள்ளல் ஓசையுடையது. கலிப்பாவில் பல வகைகள் உள்ளன.

**வஞ்சிப்பா:** இருசீர் அடிகளும், முச்சீர் அடிகளும் கலந்து வருவது வஞ்சிப்பா ஆகும். இது தூங்கல் ஓசை உடையது.

## 35. தர்மம் தலைகாக்கும்

**பக்கங்கள் 161-162**

### அ) பிரித்து எழுதுக.

1. நாளை + உடன்
2. அருகில் + உள்ள
3. வழி + இன்றி
4. பசு + மாடு
5. நாள் + அடைவில்

### ஆ) எதிர்ச்சொல் எழுதுக.

1. நிறை
2. துன்பமாக
3. தொடக்கம்
4. உள்ளே
5. மேடு

### இ) வினாக்களுக்கு விடையளி.

1. இந்திரசேனன் யார்? அவனின் குணத்தைப் பற்றி எழுதுக.

இந்திராபுரி எனும் நாட்டின் அரசன் இந்திரசேனன். அவன் மிகுந்த இரக்க குணமும், கருணை உள்ளமும் கொண்டவன்.

2. இந்திரசேனன் பூலோகம் சென்றதற்கான காரணம் யாது?

இந்திரசேனனின் சொர்க்கவாசத்தை நீட்டிக்க வேண்டுமென்றால் அவன் செய்த நற்காரியங்களால் பயன்பெறுபவர் யாரேனும் இருக்க வேண்டுமென சொர்க்கத்தின் அதிபதி கூறினார். அதை ஏற்றுக்கொண்ட இந்திரசேனன் தன்னால் பயன்பெறுபவர் யாரேனும் உள்ளனரா என்பதை அறிந்து கொள்ள பூலோகம் சென்றான்.

3. இந்திரசேனனை பற்றி ஆமை கூறியதை எழுதுக.

இந்திரசேனன் ஆட்சி செய்தபோது, அவனிடம் உதவி கேட்டு வந்த அனைவருக்கும் ஏராளமான பசுமாடுகளை தானமாக கொடுத்து உதவி செய்தான். மக்கள் அந்த மாடுகளை எல்லாம் அந்தப் பகுதியிலுள்ள புல் தரைகளில் மேய விட்டார்கள். மாடுகளும்

தினமும் அலைந்து திரிந்து அவற்றின் குளம்புகளால் மண்ணைக் கிளப்பிவிட்டதால் அந்தப் பகுதி நாளடைவில் பள்ளமாக மாறிப் போனது. மழை பெய்தபோது அந்த நீர் பள்ளங்களில் தேங்கியது. பிறகு நாளடைவில் குளமாகிப் போனது. அந்தப் பகுதியின் செழிப்பிற்கும், அங்குள்ள உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கும் அந்தக் குளமே காரணம் எனவும், அவன் செய்த நற்காரியமே பல உயிர்களைக் காப்பற்றியுள்ளது எனவும் ஆமை கூறியது.

4. "தர்மம் தலைகாக்கும்" கதையின் நீதியை எழுதுக.
நாம் செய்யும் நன்மைகளும், தீமைகளும் பல நூற்றாண்டுகளுக்கு நீடித்து இருக்கும். நன்றாக யோசித்து நல்ல காரியங்களை மட்டும் செய்தோம் என்றால் அதன் பலன் தலைமுறை தலைமுறையாக நீடிக்கும். எனவே, இனிவரும் காலங்களில் நம்மால் இயன்ற நல்ல காரியங்களை மறக்காமல் செய்ய வேண்டும்.

## 36. திருக்குறளின் பெருமை

**பக்கம் 165**

**அ) பிரித்து எழுதுக.**

1. நன்மை + நூல்
2. செம்மை + தமிழ்
3. திரு + குறள்
4. தனி + அமர்ந்த
5. நிகர் + இல்லா

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. மனம் எதனைத் தினமும் சிந்தனைச் செய்ய வேண்டும்?
இவ்வுலகில் வாழும் மக்களுக்கு எவ்வாறு வாழ வேண்டும் என்ற வாழ்க்கை நெறிகளை எடுத்துக்காட்டி சிக்கலற்று வாழ வழி செய்யும் நூலே திருக்குறள் ஆகும். அத்தகைய புகழ்பெற்ற செந்தமிழ்ச் செல்வமாகிய திருக்குறளை நமது மனதில் தினமும் சிந்தனை செய்ய வேண்டும்.

2. மாமறையின் சிறப்புகளை எழுதுக.
திருக்குறள் சங்க இலக்கியங்களில் தனிப்பெரும் சிறப்பைப் பெற்ற நூல். நான்முகனார் தமிழில் இயற்றிய மாமறையாகும். இவ்வுலகின் நீதிகளை எடுத்துரைக்கும் நிகரில்லா நன்னூலாகும்.

3. எதைப் படித்தால் வாழ்வு சிறப்படையும் என கவிமணி கூறுகிறார்?
பயபக்தியோடு திருக்குறளை தினமும் படித்தால் நம் வாழ்வு சிறப்படையும் என கவிமணி கூறுகிறார்.

4. கவிமணி எங்கு, எப்போது பிறந்தார்?
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் கன்னியாகுமரி

மாவட்டத்திலுள்ள தேரூரில் 1876 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் நாள் பிறந்தார்.

5. கவிமணியின் படைப்புகளை பட்டியலிடுக.

அழகம்மை ஆசிரிய விருத்தம், ஆசிய ஜோதி, மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், கதர் பிறந்த கதை, உமார் கய்யாம் பாடல்கள், தேவியின் கீர்த்தனங்கள், குழந்தைச்செல்வம், கவிமணியின் உரைமணிகள் ஆகியன இவரது படைப்புகள் ஆகும்.

## 37. திருக்குறள்

**பக்கம் 168**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கோட்டானை
2. காரியம்
3. சினம்
4. அரிய செயல்
5. அறிவுடையவர்

**ஆ) பிரித்து எழுதுக.**

1. திரு + வினை
2. கருவி + ஆன்
3. காலம் + அறிந்து
4. ஊக்கம் + உடையான்
5. மற்று + அதன்

**இ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. இரவு
2. வேண்டாம்
3. அறியாது
4. அகம்
5. எளிய

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. ‘‘பகல்வெல்லும் கூகையைக் காக்கை’’ எனத் தொடங்கும் குறள் உணர்த்துவது யாது?

காக்கை தன்னைவிட வலிய கோட்டானைப் பகலில் வென்றுவிடும். அதுபோல, பகைவரை வெல்ல எண்ணுபவர்க்கு அதற்கேற்ற காலம் அவசியம்.

2. ‘‘அருவினை யென்ப உளவோ’’ – குறள் விளக்கம் தருக.

ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய கருவிகளுடன், உரிய காலத்தைக் கண்டு அச்செயலைச் செய்தால், செய்வதற்கு அரிய செயல்கள் என்பதும் உண்டோ?

3. காலத்தை நோக்கி காத்திருப்போர் யார்?

இவ்வுலகம் முழுவதும் வேண்டும் என்போர், அதற்கு ஏற்ற காலத்தை எண்ணித் தவறாமல் காத்து இருப்பர்.

4. எதைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்ள வேண்டும்?

பகைவர் தாமாகவே தலைகீழாகக் கவிழ்ந்திடும் காலம் வரும்

வரையில், தங்களின் பகையுணர்வைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்ள வேண்டும்.

5. செயற்கரியச் செயல்களை எப்போது செய்ய வேண்டும்?
கிடைத்தற்கரிய காலம் வந்தால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரியச் செயல்களைச் செய்ய வேண்டும்.

## 38. பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**பக்கம் 173**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. 1933
2. குழந்தை
3. கொய்யாக்கனி
4. தென்மொழி
5. பாவாணர்

**ஆ) பிரித்து எழுதுக.**

1. பண்பு + உடன்
2. கபடம் + இல்லா
3. தமிழ் + ஆசிரியர்
4. எழுத்து + ஆற்றல்

**இ) சேர்த்து எழுதுக.**

1. மொழியுணர்வு
2. பெருஞ்சித்திரம்
3. அச்சகம்
4. சிறப்பாசிரியர்

**ஈ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. பெருஞ்சித்திரனார் எங்கு, எப்போது பிறந்தார்?
பெருஞ்சித்திரனார் சேலம் மாவட்டம் சமுத்திரம் என்னும் ஊரில் 1933 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் நாள் பிறந்தார்.

2. பெருஞ்சித்திரனாரின் பெற்றோர் யார்?
பெருஞ்சித்திரனாரின் பெற்றோர் துரைசாமி மற்றும் குஞ்சம்மாள் ஆவர்.

3. பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்களின் பெயர்களை எழுதுக.
குழந்தை, மலர்க்காடு ஆகியன பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்கள் ஆகும்.

4. பெருஞ்சித்திரனாருக்கு தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியர்களின் பெயர்களை எழுதுக.
க. நடேசனார், தமிழறிஞர் வை. பொன்னம்பலனார், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், பேராசிரியர். வீ. உலகவூழியனார், பேராசிரியர். காமாட்சி குமாரசாமி ஆகியோர் பெருஞ்சித்திரனாருக்கு தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள் ஆவர்.

5. பெருஞ்சித்திரனாருக்கு “பாவலரேறு” என்ற பட்டத்தை சூட்டியது யார்? ஏன்?

பெருஞ்சித்திரனாருக்கு “பாவலரேறு” என்ற பட்டத்தை சூட்டியவர் பாவாணர். பெருஞ்சித்திரனார் தமிழ்மொழி பற்றிய மொழியுணர்வு மிகுந்த பாடல்களை தென்மொழி இதழிலும், தமிழ்ச் சிட்டு இதழிலும் தொடர்ச்சியாக எழுதி வெளியிட்டு வந்தார். இதைக்கண்டு மனம் மகிழ்ந்து போன பாவாணர் “பாவலரேறு” என்னும் சிறப்புப் பெயரை பெருஞ்சித்திரனாருக்கு சூட்டிப் பெருமைப்படுத்தினார்.

## உ) பெருவினாக்களுக்கு விடையளி.

1. பெருஞ்சித்திரனாரின் தனித்தமிழ் இயக்கம் பற்றி எழுதுக.

பாவாணரின் விருப்பப்படி 1959 ஆம் ஆண்டு “தென்மொழி” என்னும் இதழை பெருஞ்சித்திரனார் தொடங்கினார். தனது இயற்பெயரான துரைமாணிக்கம் என்பதற்கு பதிலாக, “பெருஞ்சித்திரன்” என்னும் புனைப் பெயரில் அந்த இதழை நடத்தி வந்தார். தனித்தமிழில் வெளியிடப்பட்ட தென்மொழி இதழின் சிறப்பாசிரியர் “பாவாணர்” எனவும், பொறுப்பாசிரியர் “பெருஞ்சித்திரன்” எனவும் குறிப்பிடப்பட்டு இதழ் வெளியானது. தமிழ் ஆசிரியர்களும், கல்லூரி மாணவர்களும் அந்த இதழை விரும்பி வாங்கிப் படித்தனர். மறைமலை அடிகள், பரிதிமாற் கலைஞர் போன்ற முத்தமிழ் அறிஞர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தனித்தமிழ் இயக்கம், பாவாணர் மற்றும் பெருஞ்சித்திரனாரால் வளர்க்கப்பட்டது. தமிழ்மொழியின் ஒப்பிலா சிறப்பை ஆங்காங்கே பரவிக் கிடந்த தமிழ் மக்களிடையே எடுத்துச் சென்று சேர்ப்பித்தது தென்மொழி இதழ். தனித்தமிழின் சிறப்புகள் மற்றும் முக்கியத்துவம் பற்றித் தமிழகம் முழுவதும் குரல்கள் ஒலிக்க காரணமாகவும் அந்த இதழ் அமைந்தது.

2. இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பெருஞ்சித்திரனாரின் பங்கை விவரி.

தமிழ் மீது பற்றுக் கொண்ட பெருஞ்சித்திரனார் இந்தி திணிப்பை கடுமையாக எதிர்த்தார். அப்போது நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்துக்கொண்டு தனது உரையாலும், பாட்டாலும் மிகப்பெரும் பங்காற்றினார். இந்தி எதிர்ப்பு போரில் இவர் நடத்தி வந்த தென்மொழி இதழ் முக்கிய இடம் வகித்தது. இந்தி எதிர்ப்பு உணர்வைத் தூண்டுவதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. பெருஞ்சித்திரனார் எழுதிய உணர்ச்சிமிகு பாடல்கள் தமிழக மக்களிடையே இந்தி எதிர்ப்புத் தீயை பற்றி எரிய வைத்தது.

3. பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.

அருபருவத் திருக்கூத்து, இலக்கியத் துறையில் தமிழ்

வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள், இளமை உணர்வுகள், இளமை விடியல், உலகியல் நூறு, எண் சுவை எண்பது, கனிச்சாறு (எட்டு தொகுதிகள்), கொய்யாக்கனி, திருக்குறள் மெய்ப்பொருளுரை (பகுதி 1, 2, 3, 4), பள்ளிப் பறவைகள், பாச்சோறு (குழந்தைப் பாடல்கள்), பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள் (தொகுதி 1, 2), பாவியக் கொத்து (தொகுதி 1, 2), ஓ! ஓ! தமிழர்களே, வேண்டும் விடுதலை, தமிழீழம், தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும், சாதி ஒழிப்பு ஆகியன இவரது படைப்புகளாகும்.

## 39. வல்லினம் மிகும், மிகா இடங்கள்

**பக்கம் 177**

**அ) பின்வருவனவற்றை வல்லினம் மிகும், மிகா இடமென அட்டவணைப்படுத்துக.**

| வல்லினம் மிகும் இடம் | வல்லினம் மிகா இடம் |
|---|---|
| சுட்டெழுத்துகள் | பெயரெச்சம் |
| பண்புத்தொகை | இரட்டைக் கிளவி |
| திசைப் பெயர்கள் | வினைத்தொகை |
| ஓரெழுத்து ஒருமொழி | எழுவாய்த் தொடர் |
| உவமைத் தொகை | வினைமுற்றுத் தொடர் |

**ஆ) பொருத்துக.**

1. பண்புத்தொகை
2. உவமைத் தொகை
3. உம்மைத் தொகை
4. அடுக்குத் தொடர்
5. வினைத்தொகை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. 'வல்லினம் மிகல்' என்றால் என்ன?

'அந்தப் பையன்' என்ற தொடரில் "பையன்" என்ற வருமொழியின் முதல் எழுத்து "ப" என்னும் வல்லின வரிசையைச் சேர்ந்ததாகும். ஆகவே, "அந்த" என்னும் நிலை மொழியின் இறுதி எழுத்தோடு "ப்" என்ற வல்லின மெய் எழுத்தானது சேர்த்து எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு வல்லெழுத்து மிகுந்து வருமாறு எழுதப்படுவதே 'வல்லினம் மிகல்' எனப்படும்.

2. வல்லினம் மிகா இடம் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.

சொற்களையோ அல்லது சொற்றொடர்களையோ எழுதும்போது எல்லா இடங்களிலும் வல்லின மெய் மிகுந்து வரும் என்று கருதக்கூடாது. அவை சென்றன, எவை பறந்தன ஆகிய சொற்களில்

வல்லினம் மிகாமல் வந்துள்ளதைக் கவனிக்க வேண்டும். இவ்வாறு வல்லின மெய் மிகாமல் வந்துள்ள இடம் "வல்லினம் மிகா இடம்" எனப்படும்.

3. வல்லினம் மிகும் இடங்களில் ஏதேனும் ஐந்தினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

- 'அ', 'இ' என்ற சுட்டெழுத்துகளின் பின்னரும், 'எ' என்னும் வினா எழுத்தின் பின்னரும் வல்லினம் (க, ச, த, ப) மிகுந்து வரும்.

  எ.கா. அ + பெண் = அப்பெண்
  இ + படை = இப்படை
  எ + திசை = எத்திசை?

- இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.

  எ.கா. நூல் + படி = நூலைப் படி
  தலை + காட்டு = தலையைக் காட்டு

- பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

  எ.கா. வெள்ளை + தாள் = வெள்ளைத் தாள்
  வட்டம் + பலகை = வட்டப் பலகை

- ஓரெழுத்து ஒரு மொழியில் வல்லினம் மிகும்.

  எ.கா. தீ + சுடர் = தீச்சுடர்
  கை + குட்டை = கைக்குட்டை

- உவமைத் தொகையில் வல்லினம் மிகும்.

  எ.கா. மலர் + கண் = மலர்க்கண்
  தாய் + தமிழ் = தாய்த்தமிழ்

4. வல்லினம் மிகா இடங்களில் ஏதேனும் ஐந்தினை சான்றுடன் விளக்குக.

- வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

  எ.கா. அலை + கடல் = அலைகடல்
  ஊறு + காய் = ஊறுகாய்

- இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்களில் வல்லினம் மிகாது.

  எ.கா. பட + பட = படபட
  பாம்பு + பாம்பு = பாம்பு! பாம்பு!

- உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.

  எ.கா. வெற்றிலை + பாக்கு = வெற்றிலை பாக்கு
  தாய் + தந்தை = தாய்தந்தை

- எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.

  எ.கா. மல்லிகை + பூத்தது = மல்லிகை பூத்தது.

  குரங்கு + தாவியது = குரங்கு தாவியது.

- விளித்தொடரில் வல்லினம் மிகாது.

  எ.கா. நண்பா + கேள் = நண்பா கேள்!

  தம்பி + பார் = தம்பி பார்!

## 40. கடமையே கண்கண்ட தெய்வம்!

**பக்கம் 181**

**அ) பிரித்து எழுதுக.**

1. மரத்து + அடி 2. சண்டை + இட்டு 3. நகரத்தில் + உள்ள
4. கடை + தெரு 5. எடுத்து + உரைத்தார்

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. முடிவு 2. சமாதானம் 3. நீர்
4. பின்னே 5. உள்ளே

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. இளம் துறவி எங்கு, எதற்காகச் சென்றார்?
   இளம் துறவி காட்டிற்கு, தவம் செய்வதற்காக சென்றார்.

2. மரக்கிளையில் சண்டையிட்டுக் கொண்டிருந்த பறவைகளின் பெயர்களை எழுதுக.
   காகம் மற்றும் கொக்கு ஆகிய இரண்டு பறவைகளும் மரக்கிளையில் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

3. துறவியை அந்தப் பெண் யாரிடம் அனுப்பி வைத்தார்?
   துறவியை அந்தப் பெண் இறைச்சி கடைக்காரரிடம் அனுப்பி வைத்தார்.

4. கடமைகளைப் பற்றி இறைச்சிக் கடைக்காரர் கூறியவற்றை எழுதுக.
   கடமைகளில் இழிந்தது, கேவலமானது என்று எதுவும் இல்லை. தன்னுடைய பிறப்பு, கசாப்புத் தொழில் செய்யும் சூழ்நிலையில் வைத்திருக்கிறது. தனக்குப் பற்று எதுவும் இல்லை. தனது பெற்றோரை மகிழ்விப்பதற்கு உரிய சேவைகள் எல்லாவற்றையும் தவறாமல் செய்வதாகவும், துறவியைப் போல வீட்டைத் துறந்து காட்டிற்குப் போகவில்லை எனவும் கூறினார். மேலும், தனது நிலைக்குரிய கடமைகளை எவ்வித குறையுமின்றி மனதாரச் செய்வதாகவும், அதனால் அவருக்கு என்ன கிடைத்துள்ளது என்பதையே துறவி பார்ப்பதாகவும் இறைச்சிக் கடைக்காரர் கூறினார்.

## 41. திருக்குறள்

**பக்கம் 185**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஊக்கம் 2. பொருளுடைமை 3. மலர் நீட்டம்
4. உயர்வைப் 5. ஊக்க

**ஆ) பிரித்து எழுதுக.**

1. அஃது + இல்லார் 2. பொருள் + உடைமை
3. அசைவு + இலா 4. வெறும் + கை

**இ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. செல் 2. சேர்ந்து 3. தாழ்வு 4. குட்டை

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. நிலைத்து நிற்பது எது? நிலைத்து நில்லாமல் நீங்கி விடுவது எது?
ஒருவனுக்கு ஊக்கமுடைமையே நிலைத்து நிற்கும். பொருளுடைமையானது நிலைத்து நில்லாமல் நீங்கி விடும்.

2. செல்வம் யாரைத் தேடிப் போகும்?
சோர்வு இல்லாத ஊக்கம் உடையவரிடம் செல்வமானது, அவர் உள்ள இடத்திற்கு வழிக் கேட்டு தானாகப் போய்ச் சேரும்.

3. “வெள்ளத் தனைய மலர்நீட்டம்” – குறள் விளக்கம் தருக.
தாமரைத் தண்டின் நீளம் அது நின்ற நீரின் அளவே ஆகும். அதைப் போலவே, ஒருவனின் வாழ்க்கையின் உயர்வு அவன் தன் மனதில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே ஆகும்.

4. யார் மன உயர்வை அடையமாட்டார்?
ஊக்கம் இல்லாதவர் இவ்வுலகில் பிறருக்கு உதவும் வள்ளல் யாம் என்று எண்ணி மகிழும் மன உயர்வை அடையமாட்டார்.

5. “பரியது கூர்ங்கோட்டது” எனத் தொடங்கும் குறளின் விளக்கத்தை எழுதுக.
யானை பெரிய உடம்பையும், கூர்மையான கொம்புகளையும் உடையது. ஆயினும், ஊக்கமுடைய புலி தாக்கினால் அதற்கு அஞ்சும்.

## 42. நம்பிக்கை நட்சத்திரங்கள்

**பக்கம் 189**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கோபிசந்த் 2. வெள்ளி 3. 2019

4. புது தில்லி 5. பத்மஸ்ரீ

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. பி.வி. சிந்து எங்கு, எப்போது பிறந்தார்?

   பி.வி. சிந்து ஐதராபாத்தில் 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் நாள் பிறந்தார்.

2. பி.வி. சிந்துவின் உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டிகளைப் பற்றி எழுதுக.

   2017, 2018 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலக பேட்மிண்டன் சாம்பியன் ஷிப் போட்டிகளில் இறுதிப் போட்டி வரை முன்னேறி வெள்ளி பதக்கத்தை கைப்பற்றினார். 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுவிச்சர்லாந்திலுள்ள பாசெல் நகரில் உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் தொடரிலும் மூன்றாவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் முன்னாள் உலக சாம்பியனான ஜப்பானின் நசோமி ஒகுஹாவுடன் மோதினார். தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தார் சிந்து. முதல் மற்றும் இரண்டாவது சுற்றை 21 – 7 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று நாசோமியை வீழ்த்தி உலக சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்று உலக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். 42 ஆண்டுகால உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் வரலாற்றில் தங்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றார் பி.வி. சிந்து.

3. பி.வி. சிந்து பெற்ற விருதுகள் யாவை?

   பி.வி. சிந்துவின் அளப்பரிய சாதனைகளைப் பாராட்டி இந்திய அரசு அவருக்கு அர்ஜுனா விருதை அளித்துள்ளது. 2015 ஆம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருதையும், 2016 ஆம் ஆண்டிற்கான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதையும், 2020 ஆம் ஆண்டிற்கான பத்ம பூஷன் விருதையும் பெற்றுள்ளார்.

4. 2010 ஆண்டிற்கான காமென்வெல்த் போட்டியில் தீபிகா குமாரியின் பங்களிப்பைப் பற்றி எழுதுக.

   2010 ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டியில் தனி நபர் மற்றும் கூட்டு வில்வித்தை ஆகிய இரண்டு பிரிவுகளிலும் தங்கம் வென்று சாதனை புரிந்தார்.

5. தீபிகா குமாரி பெற்ற விருதுகளை குறிப்பிடுக.

   2012 ஆம் ஆண்டிற்கான அர்ஜுனா விருதையும், 2016 ஆம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருதையும் தீபிகா குமாரி பெற்றுள்ளார்.

## 43. பகாப்பதம்

**பக்கம் 191**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சொல்
2. நான்கு
3. பெயர்
4. வினை
5. பகுதி, விகுதி

**ஆ) பொருத்துக.**

1. பெயர்ப் பகாப்பதம்
2. வினைப் பகாப்பதம்
3. இடைப் பகாப்பதம்
4. உரிப் பகாப்பதம்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. பகாப்பதம் என்றால் என்ன?
பகுதி, விகுதி முதலியனவாக பிரிக்க இயலாத பதம் பகாப்பதம் எனப்படும்.

2. பகாப்பதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
பகாப்பதம் நான்கு வகைப்படும். அவை,
   - பெயர்ப் பகாப்பதம்
   - வினைப் பகாப்பதம்
   - இடைப் பகாப்பதம்
   - உரிப் பகாப்பதம்

3. பெயர்ப் பகாப்பதத்தை சான்றுடன் விவரி.
பெயர்ச்சொல்லாக அமையும் பகாப்பதம் பெயர்ப் பகாப்பதம் எனப்படும்.
எ.கா. நிலம், கல், காற்று, மண், நெருப்பு

4. வினைப் பகாப்பதம் என்றால் என்ன?
வினைச்சொற்களாக அமையும் பகாப்பதம் வினைப் பகாப்பதம் எனப்படும்.
எ.கா. வா, தின், கிழி, படி, உண்

5. இடைப் பகாப்பதத்தை எடுத்துக்காட்டுடன் விவரி.
இடைச்சொற்களாக அமையும் பகாப்பதங்கள் இடைப் பகாப்பதம் எனப்படும்.
எ.கா. கொல், மன், போல், மற்று, தில்

6. உரிப் பகாப்பதம் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.
உரிச்சொற்களாக வரும் பகாப்பதம் உரிப் பகாப்பதம் எனப்படும்.
எ.கா. நனி, தவ, உறு, மிகு, சால

## 44. நேர்மை தந்த பரிசு

**பக்கம் 195**

**அ) பிரித்து எழுதுக.**

1. சிறிது + அளவு
2. ஒரு + முறை
3. அறிவு + உரை
4. ஒப்பு + அடைத்து
5. பத்து + ஆயிரம்

**ஆ) சேர்த்து எழுதுக.**

1. எனக்கில்லை
2. கண்டெடுத்த
3. கணக்குப்பிள்ளை
4. கூறியுள்ளேன்
5. அதனுள்ளே

**இ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பெரிதளவு
2. சமாதானம்
3. பொய்
4. கிடைக்காத
5. தவறானது

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. கண்ணணின் குணத்தைப் பற்றி எழுதுக.

   கண்ணன் எப்போதுமே தனக்கு போதுமான வருமானம் கிடைக்கவில்லை என்று புலம்பிக் கொண்டு இருப்பான்.

2. மதிவாணன் எப்படிப்பட்டவன்? அவன் எதன் மீது நம்பிக்கை கொண்டிருந்தான்?

   மதிவாணன் தனக்கு கிடைத்த வருமானத்தை சிக்கனமாக செலவு செய்தும், மீதியை நாளைய தேவைக்காக சேமித்தும் திறம்பட குடும்பத்தை நடத்தி வந்தான். கடின உழைப்பின் மீது நம்பிக்கை கொண்டிருந்தான்.

3. இருவரும் சென்ற வழியில் என்ன கிடந்தது? அதில் இருந்தது என்ன?

   இருவரும் சென்ற வழியில் பணப்பை ஒன்று கிடந்தது. அந்தப் பையில் இருபதாயிரம் ரூபாய் பணம் இருந்தது.

4. மதிவாணனுக்கு என்ன வேலை கிடைத்தது? எப்படி கிடைத்தது?

   மதிவாணனுக்கு நகரத்தில் உள்ள வாழை மண்டியின் கணக்காளர் வேலை கிடைத்தது. அவன் வழியில் கண்டெடுத்த பணப்பையை பஞ்சாயத்து தலைவரிடம் கொடுத்து, என்ன நடந்தது என்பதையும் தெளிவாக கூறி பணத்தின் உரிமையாளரிடம் ஒப்படைக்க சொன்னான். அவனின் நேர்மையைக் கேட்டறிந்த வள்ளியப்பன், அவனைப் பாராட்டி கணக்காளர் வேலையை வழங்கினார்.

5. “நேர்மை தந்த பரிசு” கதையின் நீதியை விவரி.

நேர்மை என்பதே உயரிய மனிதப் பண்பாகும். வாழ்வில் உயர நேர்மை என்ற உயரிய கொள்கையைப் பின்பற்றுவது அவசியம். நேர்மை, கடின உழைப்பின் மூலமாக எவ்வித கடினமான செயல்களையும் ஒருவரால் சிறப்பாக செய்து முடிக்க முடியும். வாழ்வில் நேர்மை, கடின உழைப்பு, நட்பு ஆகிய மூன்றும் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இவையே சிறப்பான வாழ்விற்கு வழிகாட்டுவதாகும்.

# குறிப்புகள்

# குறிப்புகள்